உத்தம தோழன்.

மூத்திரசம்பந்தமான வியாதிகளால் அவதிப்பட்ட ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு குணமென்னும் பாக்கியத்தைக் கொடுத்து பேரும் புகழும் பெற்ற உத்தம தோழன் யாதென்று உங்களுக்குத் தெரியுமா?

அதுவே எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு, முதலிய வியாதிகளை சுஸ்தமாகக் கண்டிக்கும்.

[32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.]

இனாம்! "போஜன விதி" இனாம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, சென்னை.

நாமே உயிர்த்தோழர்கள்

20 நாளைக்கு ஒரு ரூபாய் பெற்று தினம் இரண்டு வேளை உம்முடைய வியாதிகளை அப்புறப்படுத்தி உம்முடைய வாழ் நாளை நன்னாட்களாய் கழியும்படி செய்ய

மதனசஞ்சரி டானிக்

என்னும் பெயருடன் உலாவும் தமையனும் வந்த வியாதிகளைத்தீர்க்கவும் வியாதிகள் வரவொட்டாமல் தடுக்கவும் வேண்டிய வழிகாட்டி

வைத்திய வித்தியா

என்னும் பெயருடன் இலவசமாய் கிடைக்கும்

தம்பியுமேயாம். எழுதுங்கள்

மதனமஞ்சரி பார்மஸி

1/94, சீனா பஜார், மதருஸ்.

கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் 1.] 1931ஆ செப்டம்பர் [இலக்கம் 12.

கிராமப் பஞ்சாயத்து அமைத்தல்.

சென்ற மாதத்தில் சட்ட சபையில் நிறைவேறிய லோகல் போர்டு ஆக்டின்படி லோகல் போர்டுகள் முனிசிபாலிடிகள் பழைய ஆக்டின்படி 1932 மார்ச்சு முடிய அமுல் நடத்தலாமென்ற அதிகாரம் பெற்றன. ஆயினும் இவைகளில் 1930-ம் வருஷத்து ஆக்டின்படி தேர்தல் நடத்த வோட்டர் ஜாப்தாக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. முனிசிபல் தேர்தல்கள் அக்டோபரிலும் தாலூகா ஜில்லா போர்டு தேர்தல் அதற்குச் சொற்பகாலத்திற்குப் பின்னும் நடைபெறலாம். ஆகையால் பஞ்சாயத்துத் தேர்தல்களையும் உடன் நடத்தச் சௌகரியமுண்டு. எப்படியெனில், ஜில்லா தாலூகா போர்டுகளின் வோட்டர்களின் ஜாப்தாக்களிலிருந்து பஞ்சாயத்துச் சரகத்திலுள்ள வோட்டர்களின் ஜாப்தாக்களை தனிப்படப் பிரித்து எழுதுதல் எளிது.

1920-ம் வருஷத்திய ஆக்டின்படி ஏற்பட்டுள்ள பஞ்சாயத்துக்கள் 1930-வருஷத்து ஆக்டின் பிறகும் ஏற்பட்டுள்ள புதிய பஞ்சாயத்துக்கள் இவைகளின் தேர்தல்கள் நடைபெறவேண்டியிருப்பது ஒருபுறமிருக்க, நூதன ஆக்டின்படி பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தல் இனிமேல் ஏற்படும் புது அரசியல் திட்டத்தில் இன்றியமையாதது. புதிய ஆக்டின்படி கவர்ன்மெண்டார் சுதாவாக ஒரு குறிப்பிட்ட எல்லையைக் கிராமப் பஞ்சாயத்துச் சரகமெனக் குறிப்பிட்டு அதற்குத் துடக்கத்தில் தாங்களாகவே பஞ்சாயத்தார்களை நியமனஞ் செய்து பஞ்சாயத்து நிர்வாகத்தை நடத்தும்படி சொல்ல அவர்களுக்கு அதிகாரமில்லை. புதிய ஆக்டின் 8-வது ஸெக்ஷன்படி லோகல் போர்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவேயிருக்கவேண்டும். ஆனால் கவர்ன்மெண்டார் பஞ்சாயத்து ஸ்தாபனங்களில் மெம்பர்களின் ஸ்தானம் காலி விழுந்தபோது தற்காலத்துக்காக 1920-ம் வருஷ ஆக்டின்படி தேர்தல்களை நடத்தி காலிஸ்தானங்கள் பூர்த்தி செய்திருக்கின்றனர். ஏராளமான தற்காலிகப் பஞ்சகயத்துக்களை ஏற்படுத்துதலால் விசேஷப் பயனில்லை. புதிய ஆக்டு (1) 8-வது செக்ஷனில் ஜில்லா வொன்றுக்கு ஒரு ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸரை கவர்ன்மெண்டு நியமனஞ் செய்யவேண்டுமென்று கண்டிருக்கிறது. அதனால் அவ்வித ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர்களை நியமிக்கக் கவர்ன்யெண்டார் முயற்சி யெடுத்துக்கொள்ளவில்லை யெனவும் தோன்றுகிறது. முதன் முதல் தேர்தல் மூலமாய் வரும் அங்கத்தினர்களடங்கிய 'போர்டுகள்' ஏற்பட, வோட்டர்களின் ஜாப்தாத் தயாராக வேண்டுதல் முக்கியமானது. இந்த வேலை அநேகமாய் பூர்த்தியாகிற நிலைமையிலிருக்கிறபடியால் கூடிய சீக்கிரத்தில் கவர்ன்மெண்டார் பஞ்சாயத்து ஆபீஸரை நியமிக்க முயற்சி யெடுத்துக் கொள்ளலாம். அந்த ஆபீஸர்களுக்கு வேறு எவ்வித அலுவல்கள் கொடுக்கப்படினும் ஸெலக்ட்

கமிட்டியாரின் ஆலோசனைப்படி அவர்களின் அலுவல்களில் பஞ்சாயத்துக்களை ஆங்காங்கே அமைத்தலே முக்கியமானது.

இச் சந்தர்ப்பத்தில் ஸெலக்ட் கமிட்டியார் செய்துள்ள சிபார்சுகளை இதனடியில் குறிக்க விரும்புகிறோம்.

“ சென்னை கவர்ன்மெண்டார் பஞ்சாயத்து ஜில்லா ஆபீஸரொருவர் நியமனம் பெறவேண்டு மென்று ஜில்லா போர்டாருக்குத் தெரிவிக்குங்கால் அந்த ஜில்லா போர்டு அந்த ஆபீஸரை நியமித்தே தீரவேண்டும் (2) இந்த் ஆபீஸரின் கடமைப் பஞ்சாயத்துக்களை அமைத்தலே. இத்துடன் ஜில்லா போர்டாரிடும் வேறெந்த குறிப்பிட்ட நிர்வாக வேலைகளையும் பார்க்கவேண்டும். பஞ்சாயத்தார்களுக்கு நிர்வாக விஷயமாயுள்ள சங்கதிகளைத் தெரிவித்து அப்பஞ்சாயத்து நிர்வாகங்களை மேற்பார்வையிடுதல் (3) ஆயிரம் அல்லது அதிலும் சொற்ப அதிகமாயுள்ள ஜனத்தொகை கொண்ட கிராமங்களில் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்த வேண்டுமென்ற பொறுப்பு கவர்ன்மெண்டாருக்கு இருப்பதால் ஜில்லா ஆபீஸர்கள் அவசியம் தேவை.” என்ற கருத்தை ஸெலக்ட் கமிட்டியார் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆயிரஞ் ஜனங்களடங்கிய கிராமங்களிலெல்லாம் பஞ்சாயத்துக்களை கட்டாயம் கவர்ன்மெண்டார் அமைத்தே தீரவேண்டுமென்ற ஸெக்ஷன் சட்டசபையில் நிறைவேறவில்லையென்பது உண்மை. காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்குள் வாரததே அந்த ஸெக்ஷன் நிறைவேறாததற்குக் காரணமென்பதை நாம் மறக்கக்கூடாது. சட்டசபையின் நோக்கம் இன்னதென ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர் ஒவ்வொரு ஜில்லாவிலும் நியமிக்கப்படவேண்டுமென்பதை ஸெலக்ட் கமிட்டியார் தெளிவாய்த் தெரிவித்திருப்பதிலிருந்து நன்றாய் தெரியவருகிறது. ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர்கள் நியமிக்கப் டுவார்களாயின், அவர்கள் கிராமந்தோரும் பஞ்சாயத்துக்களை யமைத்து உயர்நோக்கமுடைய ஸெலெக்ட் கமிட்டியாரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உழைப்பார்களென்று நாம் நம்புகிறோம்.

கர்நூல் ஜில்லா கௌரவ பஞ்சாயத்து ஆர்கனைஸராகிய மிஸ்டிக்கல் பஞ்சாயத்துக்களைப் புதிதாய் அமைப்பதில் கவனிக்கப்படவேண்டிய விஷயங்களை எவையெனத் தெரிந்துகொள்ளும்பொருட்டு நமக்கு அவர் பலகேள்விகளைக்கேட்டு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார். அவை தற்காலம் நாம் அறிந்துகொள்ளவேண்டிய பலவிஷயங்களைத் தெளிவாக்க உபயோகமுள்ளவை.

கேள்வி 1.—எவ்வித கிராமங்களில் பஞ்சாயத்துக்களை ஸ்தாபிக்கலாம்? அக்கிராமத்தின் ஜனத்தொகை குறைந்தபக்ஷம் இத்தனை இருக்கவேண்டுமென்ற நிபந்தனையுண்டா ? எந்தெந்த நிலைமைகளில் இரண்டு மூன்று கிராமங்களை ஒன்றாய்ச் சேர்த்து அவைகளைப் பஞ்சாயத்துச் சரகமாகச் செய்துகொள்ளலாம்? புதிய ஆக்டின்படி பஞ்சாயத்து ஏற்படுத்த கிராம ஜனத்தொகை நிலைமை இவ்விதமிருக்க வேண்டுமென ஒரு நிபந்தனையுமில்லை. எக்கிராமத்திலும் பஞ்சாயத்தை அமைக்க கிராமத்தார் மனுச் செய்துகொள்ளலாம். கவர்ன்மெண்டுக்கு அக்கிராமத்தில் பஞ்சாயத்தை ஏற்படுத்தவும் அதிகாரமுண்டு. புதிய ஆக்டு 6வது செக்ஷன்படி கிராமந்தோரும் கட்டாயமாய்ப் பஞசாயத்தொன்று அமைக்கப்படவேண்டுமென்றிருக்கிறது. அந்த ஸெக்ஷனில் காணும் சொற்கள் வெகு தெளிவாயிருக்கின்றன,

"ஜில்லாதோறும் ஒரு ஜில்லாபோர்டும் தாலூகாதோறும் தாலூகா போர்டொன்றும், கிராமந்தோறும் பஞ்சாயத்தொன்றும் அமைக்கப்படல் வேண்டும்.

இந்த ஸெக்ஷனின் அடியிற்கண்ட குறிப்பில் தாலுகா போர்டு அமையப் பெருத ஓர் ஜில்லா பாகத்தில் அதன் நிர்வாகங்களை ஜில்லாபோர்டு தலைவரும், பஞ்சாயத்து ஏற்படாத இடத்தில் கிராமநிர்வாகங்களை தாலூகாபோர்டு தலைவரும், கவனித்துவரவேண்டுமென்று கண்டிருக்கிறது. அதிலிருந்து ஜில்லா போர்டு தாலூகா போர்டுகள் எல்லாவிடங்களிலும் எவ்விதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றனவோ அதேபோல் கிராமந்தோறும் பஞ்சாயத்தொன்று ஸ்தாபிக்கப்படவேண்டுமென்பது தெளிவாகிறது. ஆனல் பஞ்சாயத்து அமைப்பை ஸ்திரஞ் செய்யவும் அல்லது தடைசெய்யவும் ஸெக்ஷன் 5 கவர்ன்மெண்டிற்கு அதிகாரத்தைக் கொடுக்கிறது 'கிராமம்' என்றதை ஸெக்ஷன் 3 (23) விளக்கிக்காட்டுகிறது. அவைகளின்படி கவர்ன்மெண்டிற்கு ரவினியூ தாலூகா சரகத்தின் எப்பகுதியையும் 'கிராமம்' என்று சொல்லவும், அதில் எப்பகுதியையும் கூட்டவும் குறைக்கவும் கவர்ன்மெண்டு கெஜட்டில் பிரசுரஞ்செய்து உறுதிசெய்ய அதிகாரமுண்டு. இம் மட்டுமல்ல, ஒரு கிராமப் பஞ்சாயத்தை கெஜட்டில் பிரசுரஞ்செய்து எடுக்கவும் நீக்கவும்கூட கவர்ன்மெண்டிற்கு அதிகாரமுண்டு. கவர்ன்மெண்டார் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களைத் தூண்டித் துளைத்துப்பார்த்து அவைகளின் மூலமாய் பஞ்சாயத்துக்கள் படபடவென ஏற்படுவதைத் தடைசெய்யலாம். ஆனல் அம்மாதிரிசெய்ய நினையார்களென நாம் திட்டமாய் நம்புகிறோம்.

பஞ்சாயத்துக்களை அமைக்க நாம் வெகு சிரத்தையெடுத்துக்கொள்ளவேண்டும். கௌரவ ஆர்கனைஸர்கள் மற்றுமுள்ள அபிமானிகள் 1930-ம் வருஷத்திய லோக்கல் போர்டு மசோதாவைப் பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட ஸெலக்ட் கமிட்டியாரின் கருத்துக்களைத் தெரிந்துகொள்வாராயின் அதிலிருந்து அவர்கள் பஞ்சாயத்துக்களை ஸ்தாபிக்கவேண்டிய முறைகளைத் தெரிந்துகொள்ளலாம். ஆரம்பத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள கிராமங்களில் பஞ்சாயத்துக்களை ஸ்தாபித்தல் உசிதம். சாதாரணமாக ஒவ்வொரு ரெவினியூ கிராமத்திலும் ஒரு பஞ்சாயத்தை பஞ்சாயத்து சரகமாகச் செய்துகொண்டிருக்கலாம். அவ்விதம் செய்யாததற்குக் காரணம் யாதெனில், ரெவினியூ கிராமங்களில் பல ஜன சங்கைக் குறைவுள்ளதாயிருக்கின்றன. ஆகையால், அவைகளில் பஞ்சாயத்துக்களை அமைத்தல் அனுகூலமானதன்று. இக்காரணத்தாலே எங்கெங்கே கூடுமாயின் இரண்டு மூன்று கிராமங்களைச் சேர்த்து ஒரே பஞ்சாயத்தையமைக்கலாமோ. அவைகளை ஒரு சரகமாகச்சேர்த்துக்கொள்ளலாமென விதி ஏற்பட்டிருக்கிறது. இரண்டு மூன்று கிராமங்களுக்குப் பொதுவாய் நீர்ப்பாசனமோ, காடோ யிருக்குமாயின், அவைகளை ஒரு சரகமாகச் சேர்த்தல் பஞ்சாயத்தமைக்க விசேஷ அனுகூலமுள்ளதாகும். மேலும் ஒரு கிராமத்தில் சில கக்ஷிகள் இருக்கின்றன. பக்க கிராமத்தில் கக்ஷியொன்றுமில்லை. இவ்விரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்துப் பஞ்சாயத்து அமைப்பின் அதன் நிர்வாகம் ஒழுங்காய் நடைபெறும். ஒழுங்கான நிர்வாகத்தில் கக்ஷி பேதங்கள் ஒழியும். கக்ஷி பேதங்களை யொழித்து ஒற்றுமையை வளர்த்தலே பஞ்சாயத்து நிர்வாகத்தின் பயனாயிருக்கவேண்டும்

கேள்வி 2.—ஒரு கிராமத்தார் தங்கள் ஊரில் பஞ்சாயத்து ஸ்தாபிக்க விரும்புகிறார்கள்; அவர்கள் முதலில் என்னென்ன செய்யவேண்டும் ?

ஊரார் குறிப்பிட்ட சரகத்தைப் பஞ்சாயத்துச் சரகமாகத் தீர்மானிக்கும்படி ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸருக்கோ, அவரில்லாவிடில் முனிசிபல் லோகல் போர்டு இன்ஸ்பெக்டருக்கோ, ஓர் கையொப்பமிட்ட கட்டை விரல் அடையாளமிட்ட மனுவை அனுப்பவேண்டும். அந்த மாஜரில் பின் சொல்லப்பட்டவைகளைக் காணவேண்டும். (1) பஞ்சாயத்து எல்லை, (வெகு திட்டமான). (2) அக்கிராமத்திற்குத்

தேவையாயுள்ள விஷயங்கள், வெகு கணக்காயும் நுட்பமாயும் குறிப்பிடல் உசிதம். (3) அப்பஞ்சாயத்து நிர்வாகத்தை வகிக்கும் திறமையுள்ளவர்களிருக்கிறார்களா. பழைய ஆக்டில் இன்னின்ன முறையில் மாஜர் அனுப்பவேண்டுமென்று உண்டு. புதிய ஆக்டில் இனியும் அம்முறைகள் குறிக்கப்படவில்லை. கூடிய சீக்கிரத்தில் கவர்ன்மெண்டார் இவ்விஷயமாய் ரூல்களைப் பிறப்பிக்கலாம்.

ஓர் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட இடத்தைப் பஞ்சாயத்துச் சரகமென கவர்ன்மெண்டார் கெஜட்டில் பிரசுரம் செய்தபின் அவ்வூரார் தங்கள் பஞ்சாயத்தில் எத்தனை நபர்கள் நிர்வாகபோர்டு மெம்பர்களாயிருக்கவேண்டுமென்று உறுதியாயச் சொல்லவேண்டும் 8 பேருக்குக் குறைந்தும் 16 பேருக்கு அதிகப்பட்டும் உள்ள போர்டு கிடையாது. ஊராரின் வேண்டுதலைத்தெரிந்து பஞ்சாயத்துபோர்டின் நபர் இத்தனையென கவர்ன்மெண்டு தீர்மானிக்கவேண்டும். ஸெக்ஷன் 49ன்படி பஞ்சாயத்துபோர்டின் சங்கை. கிராமவார்டுகளின் விவரம். முஸ்லீம், கிறிஸ்தவர் ஆதி திராவிடர் பெண்களுக்கென ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் ஸ்தானங்களின் சங்கை, இவைகளையெல்லாம் குறித்து ஊராருடன் கலந்து கவர்ன்மெண்டு தீர்மானிக்கவேண்டும். புதிதாய்ப் பஞ்சாயத்துக்களை ஸ்தாபிக்க முயல்வோர் இவ்விஷயங்களைக் குறித்துத் தங்களின் ஆலோசனைகளை ஜில்லாத்தேர்தல் ஆபீஸர்மூலமாகவோ, நேரிலோ கவர்ன்மெண்டிற்குத் தெரிவித்துக்கொள்ளலாம். வோட்டர் ஜாப்தாவைத் தயார்செய்து வார்டுகளையும் பிரித்து போர்டாரின் சங்கையையும் குறித்து கெஜட்டில் பிரசுரமானபின் தேர்தல் நடத்தல் எளிதாகின்றது, பஞ்சாயத்தும் அமைத்தாய்விட்டது,

கேள்வி 3.—பஞ்சாயத்து ஸ்தாபிக்கும்பொழுதே எந்த வரியாகிலும் விதித்து ஆகவேண்டுமா? என்னவரி, எவ்வளவு, பஞ்சாயத்தார் ஊராரிடமிருந்து வரி விதிக்கலாம்? இவ்வரியைப் பணமாகத்தான் வசூலிக்கவேண்டுமா? வேலைசெய்வதை வரிக்குப்பதிலாக வரவுவைத்துக்கொள்ள முடியுமா? பஞ்சாயத்துக்களுக்கு வரிவிதிக்கும் உரிமை கிடையாது. லோகல்போர்டு ஆக்டின்படி வரிவிதிக்கும் அதிகார ஆக்டே முதலில் வரிவிதிக்கும் பெற்றிருக்கிறது. ஸெக்ஷன் 74 (B) படி நிலத்தீர்வையுடன் ஸெஸ் விதிக்கப்படுகிறது. இது கட்டாயவரி. ரூபாய்க்கு $1\frac{1}{2}$ அணு வீதம் என்றும் மாறுதநிலையில் வரிவிதிக்கப்படுகிறது. (ஸெக்ஷன் 78 பார்க்கவும்). கலெக்டரே இந்த ஸெஸ்ஸை வசூலிக்க ஏற்பாடுசெய்யவேண்டும். (ஸெக்ஷன் 79, 91). ஜில்லா போர்டாருக்கும் வரிவிதிக்கும் அதிகாரம் உண்டு. இந்த போர்டார் தொழில்வரி சிலவிடங்களில் அதாவது இதற்குமுன் யூனியன் போர்டு சரகங்களில் வீட்டுவரி விதிக்கலாம். (3) இந்தியாகவர்ன்மெண்டு மாகாண கவர்ன்மெண்டு இவர்களின் அனுமதிபெற்று யாத்திரைக்காரர்கள் வரி விதிக்கலாம். லோகல் கவர்ன்மெண்டாரும் சில வரிகளை விதிக்கலாம். ஆனால் தாங்களே நேராக அவ்வரிகளை விதிக்கக்கூடாது. ஆனால் பஞ்சாயத்தார் தங்கள் சரகத்திற்கு இசைந்தவும் வரி அதிகாரத்தை ஜில்லா போர்டாரும் விதியாததுமான சில இனங்களின்மேல் வரி விதிக்குமாறு கவர்ன்மெண்டுக்கு சிபார்சு செய்யலாம். முன் யூனியன் போர்டாரில்லாத பஞ்சாயத்து போர்டுகள் வீட்டுவரி விதிக்குமாறு கவர்ன்மெண்டுக்கு சிபார்சு செய்யலாம். (ஸெக்ஷன் 75 B). இவ்வித சிபார்சிகளை தனிக்பட்ட மீட்டிங்கில் பஞ்சாயத்து போர்டாரின் சங்கையில் பாதி நபர்களாவது ஆமோதிக்கவேண்டும். (ஸெக்ஷன் 75 (26). வரி பணமாகத்தானிருக்கவேண்டுமென்பதில்லை. வேலைரூபமாகவும் வரி வசூலிக்கும்படி கவர்ன்மெண்டை பஞ்சாயத்தார் கேட்டுக்கொள்ளலாம். அது நம்தேசப்பழக்கவழக்கத்திற்கு மிகப்பொருத்தமானது. மைசூர்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவர் பஞ்சாயத்து திங்கட்கிழமைதோறும் பாதிநாள் வேலை செய்யவேண்டும். அல்லது அவர் ரூ. 13-8-0 வரி கொடுக்கவேண்டுமென்று விதி அமுலிலிருக்கிறது. அது நம் தேசத்திற்கு நன்மையளிக்கும்.

பத்திராதிபரின் குறிப்புகள்.

காந்தீஜி வட்ட மேஜை மகாநாட்டிந்துச் செல்கிறர்

இரண்டாந் தடவையாக சமீபத்தில் லண்டனில் கூடப்போகின்ற வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொள்ள காந்திஜி லண்டனிலிறங்கிவிட்டார். இவ்விதம் அவர் மனமுவந்து அதில் கலந்துக்கொள்ளத் தக்க நிலைமை ஏற்பட்டதைப் பற்றி மகிழ்வடைகிறேம். அவர் சொல்லியதுபோல் அவரின் பிரகிருதி சம்பந்தமுள்ள பலங்கள் குறைந்து வருகின்றன. அவரது ஆத்ம பலத்திற்குக் குறைவில்லை. இது எவ்வித நிலைமையும் கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் அவரை மேன்மேல் தள்ளிக் கொண்டே போகிறது. ஆனல் அஹிம்ஸை யென்று சொல்கிற அவரது கொள்கை கொஞ்சம் கொஞ்சமாய்ப் பலர் உள்ளத்திலும் ஆழமாய்ப் பதியவேண்டும். அப்போது தான் அவர் ஆன்ம சக்தி விசேஷப் பலனை யளிக்கும். மகாத்மாவின் கொள்கையின் முக்கியாம்சங்களைப் பலரும் அறிந்து அனுஷ்டித்து வருகின்றனராகையால் பூர்ண நம்பிக்கையுடன் இந்திய அரசியல் சமுதாயச் சீர்திருத்தத்தை மட்டுமன்று உலகத்தின் எல்லா நாடுகளின் சீரையும் உயர்த்த அவர் முயலவேண்டுமென்று நாம் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேம். அவர் ஏடனில் பேசிய மொழிகளை ஊன்றிப் பாருங்கள். அதில் இந்தியாவின் சுதந்திரம், இந்தியரின் செல்வாக்கு, உயர்ந்த கௌரவநிலை ஆகிய இவைகளில் விசேஷ ஊக்கங் காட்டுபவராயினும் உலகெங்கும் அன்பு மயமாயிருக்கவேண்டுமென்ற பொருள் கொண்ட மொழிகளே அவர் உள்ளத்திலிருந்து வெளிவந்திருக்கின்றன. அவரின் கொள்கையில் 'தன்னுடு' என்ற மமதையில்லை. பொன் போன்ற உயர்ந்த ஒளியுள்ள கொள்கை அவரது. உலகத்திலுள்ள நாடுகளாகிய இரத்தினங்களில் இந்தியாவும் ஒரு இரத்தினமா யிருக்கவேண்டுமென்பதே அவரின் ஆர்வம். இக்கருத்துடனே இந்தியா சுதந்திரத்தை நாடுகிறது. இதை ஆங்கிலேயர் அறியவேண்டும். இங்கிலாந்திற்கு அவ்விதமறியும் கௌரவ புத்தி உண்டென்றே நாம் எண்ணுகிறேம்.

* * * * *

இந்தியச் சட்ட சபையில் பத்திரிகைகளின் சுதந்தரங்களைக் கட்டுப்பாடு செய்ய ஒரு மசோதா ஆலோசனையிலிருக்கிறது. சென்ற மார்ச்சு மாதத்தில் இதே விஷயமான மசோதா ஒன்று இந்திய சபையின் ஆலோசனைக்குக் கொண்டுவர முயற்சிக்கப்பட்டது. ஆனல் அப்போதிருந்த நெருக்கடியில் கவர்ன்மெண்டு அதை நழுவவிட்டனர். இப்போதுள்ள மசோதா முன் மசோதாவிலுள்ளபடி அவ்வளவு கடுமையான செக்ஷன்கள் கொண்டதல்லவென சொல்லப்படுகிறது. ஆனல் இம்மசோதாவிற் கண்டிருப்பதாவது, எப்பத்திரிகையிலுள்ள வியாஸம், கொலையையோ கலகத்தையோ செய்யத் தூண்டக்கூடியதாயிருப்பினும் சரி, அல்லது கொலையாளியையோ கலகம் புரட்சி செய்தவரையோ அல்லது செய்தவரென நம்பப்பட்டு விசா

ரணை செய்யப்படுபவரையோ புகழ்ந்தோ ஆதரித்தோ அவ்வியாஸத்தில் கண்டிருப்பினும் சரி, பிரத்தியக்ஷமானவராயினும் சரி, கல்பிதமானவராயினும் சரி, அப்பத்திரிகையிடமிருந்து ஏராளமான ஸெக்யூரிடி வாங்கலாம் அல்லது அதைப் பரிமுதல் செய்யலாம் என்று அம்மசோதாவில் கண்டிருக்கும் முக்கியாம்சங்கள். இம்மசோதாச் சட்டமாகுமாயின் இச்சட்டத்தைக் கொண்டு அனேகப் பத்திரிகைகளை பலஹீன மாக்கலாமே யன்றி உண்மையில் கவர்ன்மெண்டு தடுக்க நினைப்பதுபோல் எழுதும் பத்திரிகைகளை யடக்க இச்சட்டம் பலமற்றது. கொலை, பலாத்காரம், கலகம் போன்ற குற்றங்களைச் செய்யத் தூண்டுபவர்களைத் தண்டிக்க பீனல் கோடில் அனேக செக்ஷன்களிருக்கின்றன. அவ்வித செக்ஷன்களின்படி குற்றஞ் செய்தவரைப் பலமாய்த் தண்டிக்கவும் கூடும். அப்போது பின்னால் அவ்விதக் குற்றஞ் செய்யப் பலர் பயப்படுவார். பத்திரிகைகளிடமிருந்து ஸெக்யூரிடி வாங்குதலும் அவைகளைப் பரிமுதல் செய்தலும் இவ்விதப் பயனைக் கொடா. கொலை கலகத்தை மெச்சியாவது ஆதரித்தாவது எழுதும் பத்திரிகைகளைத் தடுக்கவும் பினல் கோடில் சில செக்ஷன்களிருக்கின்றன. கொலை கலகம் இவைகளைச் செய்யும்படி உதவி செய்கின்றதைத் தடுக்கத்தக்கச் சட்டம் வேண்டியது அவசியமே. அதற்குப் பினல்கோடில் ஒரு செக்ஷனைத் திருத்தி அமைத்தலே போதுமானது. கவர்ன்மெண்டு தடை செய்யவேண்டுமென்று விரும்புகின்ற மூன்றாவது விஷயமாவது இக் குற்றங்கள் செய்பவரை மெச்சியோ ஆதரித்தோ அல்லது குற்றஞ் செய்திருப்பாரென கோர்ட்டில் விசாரணை செய்யப்படுபவரைப் புகழ்ந்தோ ஆதரித்தோ எழுதும் விஷயங்களைத் தடுத்தலே. இவ்விஷயம்தான் அம்மசோதாவின் முதல் நோக்கமெனத் தெரிகிறது. துஷ்டச் செயல்களை, குணங்களை அடக்கக் காந்திஜி சொல்லும் முறைகளே தகுதியானவை. அதாவது கெட்ட செயல்கள் எண்ணங்கள் இவைகளில் அருவருப்பு உண்டாகும்படி பொதுஜனங்களிடம் நல்லுணர்ச்சி பரவும்படி செய்தலே. சட்டதிட்டங்களால் கெட்ட எண்ணங்கள் நீங்கா. அவை வேறுவழிகளாய்த் திரும்பவும் வெளிக்கிளம்பிக் கொண்டே யிருக்கும். சட்டங்கள் வலுக்க வலுக்க கெட்டகுணங்கள் ஆழத்தில் சென்று வேரூன்றி பலமுள்ளவைகளாக வெளிக் கிளம்பும் தன்மை யுடையவை. அப்போது அவைகளைத் தடுத்தல் சிரமமான காரியமாய்விடும். இப்போது இந்திய கவர்ன்மெண்டின் சட்ட மெம்பராயிருக்கும் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் ஒரு காலத்தில் தாம் அனிபெஸன்டு அம்மையாருடன் ஹோம்ரூல்லீகின் காரியதரிசியாயிருந்ததையும் அப்போதுள்ளப் பத்திரிகைப் பரிமுதல் சட்டத்திற்கு விரோதமாய் பெஸண்டு அம்மையார் பக்கம் கோர்ட்டில் தாம் வாதஞ் செய்ததையும் மறந்து எவ்வளவு குறுகிய பந்தோபஸ்துடன் கூடியதாயினும் இம்மசோதாவை இந்தியச் சட்டசபையில் கொண்டுவர ஏற்பட்டதே ஓர் ஆச்சரியம்.

ஜமீன்தார் நிலச் சம்பந்தமான மசோதா.

ஜமீன்தாருக்கும் குடியானவர்களுக்குமுள்ள உரிமைகளை ஒழுங்குபடுத்தவும் முன் ஆக்டைமாற்றவும் ஓர் மசோதாவை கவர்ன்மெண்டார் பிரசுரஞ் செய்திருக்கிறார்கள். இம்மசோதாவிலுள்ள குறைகளைக் கண்டித்து மதராஸ் நிலச்சுவான்தார்களான சங்க குடிகளின் சார்பாக ஸ்ரீமான்கள் வி. ராம்தாஸ் பந்துலுவும், பி. விசுவநாததாசும் ஓர் ஸ்டேட்மெண்டை வெளியிட்டனர். திருத்தணியில் 6-9-31ல் ஜமீன் பட்டாதாரிகளில் பலர் இம் மசோதாவைத் தீர ஆலோசித்துத் தங்களின் கருத்துக்களை கவர்ன்மெண்டிற்குத் தெரிவிக்கும்பொருட்டு ராஜா போப்பராசு ராம கிருஷ்ணராசுலிங்காரு என்ற பெரியவரின் தலைமையின் கீழ் கூடினர். இம்மகா நாட்டிற்குப் பிரதமமந்திரி திவான்பகதூர் பி. முனிசாமிநாயுடு பிரசன்னமாயிருந்தார். தலைவர் தம்முன்னுரையில் ஸ்ரீமான்கள் வி. ராம்தாஸ் பந்துலு, பி. விசுவநாததாஸ ஆகிய இருவர்களின் ஸ்டேட்மெண்டை ஆதரித்துப்பேசிவிட்டு இம்மசோதாவைத் தள்ளிவிட்டு காலத்திற்கேற்றபடி பூரணமான மாறுதல்களடங்கிய ஓர் புதிய மசோதாவைத் தயாரித்துப் பிரசுரித்து இனி அமையப்பெரும் நூதனச் சட்டசபையின் ஆலோசனைக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னர்.

இந்திய சரித்திரத்திலே ஜமீன்தார் என்ற பதவி சமாதானக் குறைவுள்ள நாளில் தற்செயலாய் ஏற்பட்ட ஓர் அதிசய சம்பவம். ஆதியில் ஜமீன்தார்கள் ஈஸ்டு இந்தியாக்கம்பெனிக்கு நிலவரி வசூல் செய்துகொடுத்துவந்தவர்கள். சாசுவத ஸெட்டில்மெண்டு ஏற்பட்டதும் இவர்கள் தாங்கள் வரி வசூலித்துவந்த நிலங்களுக்குச் சொந்தக்காரர்களானுர்கள். சில விசேஷ உரிமைகளையும் பெற்றனர். அவர்கள் பெற்றுள்ள உரிமை இங்கிலாந்திலுள்ள லார்டு லிங்கத்லோ, லார்டு பெதோவெனுக்குக்கூடவில்லை. அந்நாட்டில் சாமானிய நிலச்சுவானும் பெரிய நிலச்சுவானும் ஒரே சட்டத்திற்குட்பட்டவர்களே. இந்தியாவிலோ இவர்கள் விசேஷ உரிமை பெற்றிருப்பதுடன் மேலும் மேலும் அதிக உரிமைகளைப்பெற முயல்கின்றனர், கூடிய சீக்கிரத்தில் இந்திய அரசியலமைப்பு மாறுபடப்போகிறது. அதில் வரிவிகிதங்களும் மாறுபாடு அடையும். அப்போது நிலவரிவிகிதம் சட்டசபைசெய்யும் சட்டதிட்டங்களுக்குட்பட்டும் அச்சபையின் மேற்பார்வையில் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுமேயன்றி லோகல் கவர்ன்மெண்டு நிர்வாக சபைமெம்பர்களின் மனம்போன்றபடி வரிவிதித்தல் வசூலித்தல் நடவாது. அப்போது இயற்கைக்கே மாறுபட்ட ஜமீன்பதவி நீங்கி ஜமீன்தார்களின் நிலைமை மற்றுமுள்ள நிலஸ்வான்களைப்போலிருக்குமென்று எதிர் பார்க்கிறோம்.

கிருஷ்ணு, கோதாவரி, மறு நிலவரி ஸெட்டில்மெண்டு.

கிருஷ்ணு கோதாவரி நிலத்தீர்வை செட்டில்மெண்டு விஷயமாய் கவர்ன்மெண்டார் ஓர் அறிக்கையைப் பிரசுரஞ்செய்திருக்கின்றனர். இவ்வறிக்கையில் பிறப்பித்திருந்த கவர்ன்மெண்டின் உத்திரவின் ஒரு பகுதியை தனிப்பட எடுத்து விளக்கியிருக்கிறார்கள். அப்பகுதியாவது:

"முன் ஸெட்டில்மெண்டில் விதிக்கப்பெற்ற நிலத்தீர்வையின்மேல் இந்த ஸெட்டில்மெண்டில் உயர்த்தப்பட்டிருக்கிற விகிதத்தில் எவ்வளவு கால விலைவாசி நிலைக்குத் தக்கவாறு குறைக்கப்படவேண்டும், இக் குறைவு விகிதத்தை எப்போது அதிகப்படுத்தலாம் என்ற விஷயம்; கிஸ்தி வசூலிக்கப்படும்முன் தீர்மானிக்கப்படும்".

இவ்வறிக்கையிலிருந்து இந்தப்பசலியில் எம்மடங்கு தீர்வை உயர்த்தபபடுமென்று இனியும் தீர்மானிக்கப்படவில்லை. இப்பசலியில் எந்தத்தரமான நிலத்திற்கும் தீர்வையில் ரூபாய்க்கு 1 அணுவுக்குமேல் அதிகவரி விதிக்கப்படமாட்டாதெனவும் தெரிகிறது.

விவசாயக் குறிப்புகள்.

பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தில் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின் குணங்கள், விலை விகிதங்கள், உற்பத்தியாகுமிடங்கள், விற்பனை செய்யக்கூடிய இடங்கள் ஆகிய பலவித அம்சங்களைக் கவனிக்க ஓர் சங்கத்தார் இருக்கின்றனர். அச்சங்கத்தினர் இந்தியாவில் நெற்பயிர் செழித்து அதிக மாசூல் கொடுக்குமாறு செய்யவும், உயர்ந்த தானியங்கள் பயிராகும்படி வேண்டிய சௌகரியங்கள் செய்யவும் £ 15,790 அல்லது சுமார் ரூ. 20 லக்ஷம் உதவி புரிவதாகப் பணத்தை ஒதுக்கி வைத்திருக்கின்றனர். இத்தொகை 5 வருஷங்களில் செலவிடப்படும்.

* * * *

இந்தியா கவர்ன்மெண்டு இவ்வுதவிப்பணத்தை நல்வழிகளில் உபயோகிக்க, விவசாயப் பரிசீலனைச் சங்கத்தார் ஓர் ஸ்கீம் தயாரித்திருக்கிறார். அன்னிய நாடுகளுக்கு ஏராளமாய் அரிசி ஏற்றுமதி செய்கின்ற பர்மா மாகாணத்திலும் பாட்னு அரிசி ஏற்றுமதிசெய்யும் வங்காள மாகாணத்திலும், நெற்பயிர் அபிவிருத்திசெய்யும் பொருட்டுச் செலவாகும் தொகையில் பாதியை பிரிட்டிஷ் ஸாம்ராஜ்ய ஏற்றுமதி, இறக்குமதிகளை கவனிக்கும் போர்டார் கொடுத்துதவுவதாகச் சொல்லியிருக்கின்றார். இதர ஐந்து மாகாணங்களில் நெற்பயிர் அபிவிருத்தியைப்பற்றி பலபல முறைகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. அதற்குள்ள செலவு அகில இந்திய விவசாய சங்கத்தாரின் பொறுப்பு.

* * * *

இந்தியாவில், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் இவைகளின் பூரா விஸ்தீரணத்தைப்போல $1\frac{1}{2}$ மடங்கு அதிகமுள்ள நிலத்தில் நெற்பயிர் விளைவிக்கப்படுகின்றது. சுமார் 3 கோடி 30 லக்ஷம் டன் அரிசி ஏற்றுமதியாகின்றது. இங்கிலாந்திற்கு மட்டும் £ 17 லக்ஷத்து 90 ஆயிரம் விலை பெறுமான அரிசி நாலாபக்கங்களிலிருந்தும் ஏற்றுமதியாகின்றது. நெற்பயிரைச் செழிக்கச்செய்ய எத்தனையோ வழிகள் உள. இப்போது பயிர் செய்யப்படும் நெற்பயிர்களையும் நல்ல விதைகளை உபயோகிப்பதனாலேயே அதிக மாசூல் கொடுக்குமாறு செய்யலாம். அன்னிய நாடுகளில் விளைகின்ற நெல்தானிய விதைகளை உபயோகித்துப் பயிரைச் செழிப்பிக்கச் செய்யலாம். உயர் விவசாயமுறைகள் ஆங்காங்கே அனுஷ்டிக்கப்படுகின்றன. இம்முறைப்படி 10 லக்ஷம் ஏக்ரா நிலத்தில் நெற்பயிர் விளைவிக்கப்படுகின்றது.

* * * *

கங்கையிலிருந்து மின்சாரசக்தி உற்பத்தி:—கங்காநதி மின்சார சக்தியையும் நமக்கு உதவுகின்றது. இம்மின்சார சக்தி கங்காநதி அப்பர்வாய்க்கால் செல்லும் பிரதேசத்தில் உபயோகிக்கப்பட்டு வருகின்றது, 45 லக்ஷம் ஏக்ரா நிலத்திற்கு ஜலம் பாய்ச்சுவதற்கு உபயோகமாயிருப்பதுடன் ஷாரன்பூர், மீரத்து, அலிகார், முசபர்நகர், பலாந்த்ஷா, ஹிதாராஸ், குர்ஜா, சாம்பல், சாந்தான்வி, நாகினு, நயிபபாத், ஆம்ரோ, ஹிர்தவார், ஹரிஹர்பூர் ஆகிய பட்டணங்களுக்கு மின்சார வெளிச்சமும் கொடுக்கிறது. பத்தாயிரத்திற்குமேல் இருபதாயிரம் ஜனங்கள்வரை

யுள்ள 15 பட்டணங்கள். ஐயாயிரத்திற்குமேல் பத்தாயிரம் ஜனங்கள் வரையுள்ள 30 பட்டணங்கள் ஆகிய பத்துலக்ஷம் ஜனங்களுக்கு மேற்பட்ட 45 பட்டணங்களுக்கு மின்சாரசக்தி உபயோகமாயிருக்கிறது. ஈஸ்டு இந்தியா நார்த் வெஸ்டு (வடமேற்கு) ரயில்வேக்களும் இந்த மின்சாரசக்தியை உபயோகித்துவருகின்றன. இந்த மின்சார சக்தி 880 மைல் நீளத்தில் பத்தாயிரம் சதுரமயில் அடங்கிய பிரதேசத்தில் உபயோகிக்கப்பட்டுவருகிறது. இதுவரை வீணாய்ப் போய்க்கொண்டிருந்த நதிகளின் ஜலத்தை பள்ளத்திலிருந்து மேட்டிற்கு இறைக்க இச்சக்தி உபயோகமாகின்றது. காளிநதியிலிருந்து 30 ஆயிரம் ஏக்ரா நிலத்திற்கும், ராம்கங்கா நதியிலிருந்து 50 ஆயிரம் ஏக்ரா நிலத்திற்கும் இச்சக்தியின் உதவியால் நீர்ப்பாய்ச்சல் வசதி ஏற்பட்டிருக்கிறது. மேலும் 5 ஆயிரம் ஜனங்களுக்குக்குறைந்த கிராமங்களிலுள்ள கைத்தொழிற்கும் தோட்டப்பயிர்களுக்கும் அனுகூலமான வழிகளில் இச்சக்தி உபயோகப்பட்டு வருகிறது. இவ்வித சௌகரியமெல்லாம் 1920ம் வருஷத்திற்குப்பின் ஏற்பட்டவை.

*   *   *   *

விவசாயத்தொழிலின் வரவு செலவு.

உரோமாபுரியிலுள்ள சர்வதேச விவசாய அபிவிருத்தி சங்கத்தார் ஒவ்வொரு வருஷத்திலும் விவசாய சம்மந்தமான மூலதனம் வரவு செலவு இவைகளைக் குறித்துப் பலர் அனுபபும் வியாஸங்களை ஊன்றிப்பார்த்து அவைகளில் சிறந்த முதன்மையான வியாஸம் எழுதியவர்க்கு ஓர் தங்கப் பதக்கமும் பத்தாயிரம் லீர் (ரூ.5000) உம் பரிசுகொடுப்பதாய் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவ்வருஷ வியாஸங்களை 30-9-31க்குள் அனுப்பவேண்டும். பரிசு 31-12-31ல் அளிக்கப்படும்.

*   *   *   *

மேனர்டு கங்காராம் பரிசு.—பஞ்சாப் கவர்ன்மெண்டார் மூன்றுவருஷங்களிற் கொருதடவை விவசாய அபிவிருத்தி நுட்பங்களைக்குறித்து அனுப்பப்படும் வியாஸங்களில் முதன்மையான வியாஸத்திற்கு ரூ. 3000/- பரிசு அளிக்கிறார்கள். முதன்முதல் பரிசு டாக்டர் ஜி ஏ. பார்பர், டி. எஸ். ஸி. ஸி. ஐ. இ., கேம்பிரிட்ஜ் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. கோயமுத்தூரில் பயிர்செய்யப்படும் கரும்பு பஞ்சாப் சீதோஷ்ணஸ்திதியுள்ள நாட்டில் மிக செழித்துவளருமென்று ருசுப்படுத்திக்காட்டியிருக்கிறார். இக்கரும்பு அந்நாட்டில் பயிராகும் கரும்பைக் காட்டிலும் அதிக நன்றாய் வளருமென்றும் தெரிவித்திருக்கிறார். இதன் பயனாய் பஞ்சாபில் இதுவரை வழங்கிவரும் கரும்புக்குப் பதிலாய் கோயமுத்தூர் கரும்புப்பயிர் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த வருஷப் பரிசுக்கு வியாஸங்களை 31-12-32க்குள் வேண்டுவோர் அனுப்பவேண்டும்.

*   *   *   *

புல் மேய்கின்ற மாடுகளுக்கு உப்பு உணவு.—இந்தியாவில் மாடுகளுக்கு அதிலும் மேய்கின்ற மாடுகளுக்கு உப்புக்கொடுத்தல் சாமானியமாய் அனுபோகத்தில் கிடையாது. ஆனால் மருந்தாகவும், விருந்தாகவும், உப்பை உணவாக மாடுகளுக்குக் கொடுத்தல் உண்டு. 1925ம் வருஷம் முதல் மாடுகளுக்கு உப்பை உண

வாகக் கொடுத்து விவசாய இலாகா உத்தியோகத்தினர் அதன் குணங்களைக் கவனித்துவருகின்றனர். 4 பவுண்டு நிறையுள்ள கல் உப்பை $1\frac{1}{2}$ அடி நீளம் $1\frac{1}{2}$ அடி அகலம் $\frac{1}{2}$ அடி ஆழமுள்ள அகன்ற ஒரு மரத்தொட்டியில் வைக்கவேண்டும். அத்தொட்டியை விசாலமான புல் தரையின் மத்தியில் வைக்கவேண்டும்.

* * * *

உப்பு உணவின் பயன்கள்.

(1) இந்தியாவில் மாடுகளுக்கு உப்பை உணவாகக்கொடுத்தல் அதிசய விஷயம். மேய்ந்து ஜீவிக்கிற மாடுகள் பாறைகளை, சாம்பலை, மற்றுமுள்ள மாடுகளின் சரீரங்களை நாக்குகளால் நக்கி சொற்ப உப்பை உட்கொள்கின்றன.

(2) கல் உப்பு மேய்கின்ற மாடுகளுக்கு அதிக சௌகரியமுள்ளதாயிருக்கிறது. ஏனெனில் அது கட்டியாயிருப்பதுடன் ஜல ஸத்துக் குறைந்துள்ளதாயிருக்கின்றது.

(3) தொழுவில் கட்டுப்பட்டுள்ள மாடுகள் மேய்கின்ற மாடுகளைக்காட்டிலும் அதிக உப்பை உட்கொள்கின்றன. பசும்புல்லைத் தின்கின்ற மாடுகளைக்காட்டிலும் காய்ந்த புல்லைத் தின்பவை அதிக உப்பை உட்கொள்கின்றன.

(4) பசுமாடுகளுக்கு உப்பில் அதிக ஆசை. அதிலும் உப்புபூமி, பாறைகள் இவைகளை நக்குகிற வழக்கத்தை மறந்த மாடுகள் அதிக ஆவலுடன் உப்பைத் தின்கின்றன.

(5) உப்பைத் தின்கிற மாடுகள் சாதுக்களாயிருக்கின்றன. நிதானமாய் ஒழுங்காய் வளர்கின்றன.

* * * *

சுதந்திரம்பெற்ற அயர்லாந்தில் பாலும் விவசாயப்பொருளும் உற்பத்தி.

அயர்லாந்து என்பது 32 கௌண்டிகள் (ஜில்லாக்கள்) அடங்கியது. அதில் சுதந்திரம்பெற்ற அயர்லாந்தில் 26 கௌண்டிகள் இருக்கின்றன. இதன் பரப்பு 1,70,19,154 ஏக்ரா. இதிலுள்ள ஜனசங்கை சுமார் 30 லக்ஷம். இவர்களுள் $6\frac{3}{4}$ லக்ஷம் ஜனங்கள் நிலத்தைப் பயிர் செய்வதிலோ, தோட்டவேலை செய்வதிலோ அல்லது முன்னிருவகையினருக்கு உதவி செய்வதிலோ ஈடுபட்டிருக்கின்றனர். சுதந்திர அயர்லாந்தில் 20 ஆயிரம் ஜனங்களுக்கு மேற்பட்ட தொகையினருள்ள பட்டணங்கள் வெகு குறைவு. ஒரு லக்ஷம் ஜனத்தொகைக்கு அதிகமுள்ள பட்டணங்கள் 'டப்ளினும், கார்குமே'. இந்நாட்டில் ஒருவருஷத்தில் சுமார் 59 கோடி காலன் பாலும், 15 லக்ஷம் அந்தர் நிறையுள்ள வெண்ணெயும் கிடைக்கின்றன. அயர்லாந்திலுள்ள வயல்கள் தோட்டங்கள் வெகு சிறியவை. இந்நாட்டுக்குடியானவர் வெகு ஏழை யெனத்தெரிகிறது. ஒவ்வொரு குடியானவனின் வருஷ வருமானம் £ 88 என கருதப்படுகிறது. 30 ஏக்ராவிலும் குறைவாயுள்ள நிலஸ்வானின் தொகை 3,10,824. மொத்த நிலஸ்வான்களின் தொகை 4,43,406. கூட்டுறவு விவசாயச் சங்கங்களின் உதவியே நிலஸ்வான்களின் தற்கால உயர்நிலைக்கு ஓர் முக்கிய காரணம்.

* * * *

பொதுநல ஸ்தாபனங்களைப் பற்றிய குறிப்புகள்

ஒவ்வொரு ஜில்லாவிற்கும் பஞ்சாயத்துக்களை மேற்பார்வையிடும் ஆபீஸர் வேண்டுவதேன்? இவ்விஷயமாய் இராமனாதபுரம் ஜில்லா போர்டாரின் அபிப்பிராயத்தை இதனடியில் பிரசுரிக்கிறோம்.

பழைய யூனியன் போர்டுகளைச்சேர்த்து தற்காலத்தில் 225 பஞ்சாயத்து போர்டுகள் இந்த ஜில்லாவிலிருக்கின்றன. 28 நூதன பஞ்சாயத்துக்களை ஸ்தாபிக்க கவர்ன்மெண்டின் உத்தரவு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அநேக கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் காலக்கிரமத்தில் ஏற்படலாம். பஞ்சாயத்துக்களோ ரயில்மார்க்கத்திலோ, பெரிய ரஸ்தாக்களின் அருகிலோ இல்லாமல் ஆங்காங்கே நாலாபக்கங்களிலு மிருக்கின்றன. இவைகளின் நிர்வாகங்கள் சரிவர நடைபெற ஒரு தனி உத்தியோகத்தினரின் மேற்பார்வையும், யுக்தியும் உதவியும் அவசியம். புதிய பஞ்சாயத்துக்களை ஸ்தாபிப்பதிலும், அவைகளின் நிர்வாகங்களை நடத்துவதிலும் அநேக நுட்பமான விஷயங்கள் உள. புதிய பஞ்சாயத்து போர்டார்களுக்கு இவைகளை நிர்வகிக்கும் சட்டஞானமிராது. ஆகையால் நிர்வாகம் சட்டப்படி ஒழுங்கான முறைகளில் நடைபெறுதல் சாத்தியமன்று. தாலூகா போர்டு தலைவர்களோ அல்லது ஜில்லா போர்டுத் தலைவரோ அவ்வப்போது ஒவ்வொரு விஷயத்திலும், சமயத்திலும் பஞ்சாயத்து போர்டார்கள் இன்னின்ன முறைகளை இன்னின்ன காரியத்திற்கு அனுஷ்டிக்கவேண்டுமென்று கடிதங்கள் மூலமாய் எழுதியனுப்புவதும் சாத்தியமில்லாத காரியம். ஆகையால் பஞ்சாயத்து விஷயங்களைக் கவனிக்க ஜில்லா போர்டாரால் நியமிக்கப்படும் ஓர் ஆபீஸர் தேவையே. இவரின் கடமை பஞ்சாயத்துக்களை ஸ்தாபித்தல் அவைகளுக்கு நிர்வாகமுறைகளை எடுத்துக் காட்டல், அவைகளின் நிர்வாகத்தை மேற்பார்வையிடுதல் ஆகிய இவைபோன்றவைகளே. ஜில்லாபோர்டார், தாலூகாபோர்டார்கள், பஞ்சாயத்துக்கள் விஷயமாய் ஏற்படுத்தும் மற்றும் காரியங்களையும் இவரே கவனிக்கவேண்டும். இவ்வித முறையால் தாலூகாபோர்டுகளுக்கும் ஜில்லாபோர்டுகளுக்குமுள்ள பஞ்சாயத்தை மேற்பார்வையிடும் சிரமங்கள் குறையும். மாகாண கவர்ன்மெண்டார் இந்த ஜில்லா ஆபீஸரை மாகாண கவர்ன்மெண்ட் பதவியிலுள்ள ஆபீஸர்பதவியில் அங்கீகரிக்க வேண்டும். பஞ்சாயத்துச் கணக்குகளைத் தணிக்கை செய்யும் அதிகாரத்தையும் ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர்களின் பொறுப்பில் மாகாண கவர்ன்மெண்டார் ஒப்புவித்தல் நலம். இதன்மூலமாய் லோகல்டண்டு ஆடிடர்களின் வேலையும் குறையும்.

* * * *

(2) அனந்தபுரம் ஜில்லா பெனுகொண்டா தாலூகாபோர்டார், பாடசாலைகள் எவ்வெப் பொழுது நடைபெறல்வேண்டுமென்பதைக் குறித்துப் பின்வரும் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். போர்டாரின் அபிப்பிராயத்தில் ஒருபாடசாலையில் வாரத்தில் 6 நாட்கள் தினசரி 5 மணிநேரம் போதனை நடைபெறல்வேண்டும்; மகம்மதியப்பையர்களுக்கு வெள்ளிக்கிழமை இதர மதத்தினருக்கு ஞாயிற்றுக் கிழமை அல்லது சந்தை கூடும்நாள் விடுமுறைநாட்கள். தினசரி எந்நேரங்களில் பாடசாலையில் போதனை நடைபெற வேண்டுமென்பதை பஞ்சாயத்துத்தலைவர் அவ்வூர்க்குத் தகுந்த நேரங்களில் முன்னதாகவே தாலூகாபோர்டுத் தலைவரையும் அ

சாங்க வித்யா இலாகா டிப்டி இன்ஸ்பெக்டர்களையும் கலந்து நேரங்களை ஸ்திரப் படுத்தல்வேண்டும். கோடைநாட்களில் விடுமுறை விடுதலுக்குப்பதிலாக அறுவடைகாலத்தை விடுமுறை நாட்களாக மாற்றிவைத்துக்கொள்ளலாம். ரம்ஜான் தினங்களில் மகம்மதியப் பாடசாலைகள் காலை 7 மணிமுதல் 10 மணிவரை நடைபெறலாம். அறுவடை ரஜாநாட்கள் கோடைகால விடுமுறைநாட்கள் எத்தனையோ அத்தனையே.

* * * *

அனந்தப்பூர் ஜில்லா தலூகாபோர்டுகள் ஆதவானி, பஹாரா, திருப்போரூர், பஞ்சாயத்துக்கள் தங்கள் தொகுதிகளில் தனிப்பட்ட வகுப்பினருக்கென தனிப்பட்ட தொகுதிகள் தேவையில்லையெனத் தீர்மானித்திருக்கின்றனர்.

* * * *

ஆதித்திராவிடச் சிறுவர்கள் கிராமப் பாடசாலைகளில் சேர்ந்து படிக்குமாறு விசேஷச் சிரத்தை யெடுத்துக் கொள்கிற உபாத்தியாயர்களுக்கு தனிப்பட்ட உதவிப்பணம் கொடுப்பதாக தேவகோட்டை தாலூகா போர்டு தீர்மானஞ் செய்திருக்கிறது. மற்றும் போர்டுகளும் இதைப் பின்பற்றி தனிப்பட்ட ஜாதிக்கென ஸ்கூல்கள் ஏற்படுத்துவதை நிறுத்த முன்வருவார்களா?

* * * *

ஜில்லா போர்டு உத்தியோகத்தினர் கதர் உடை தரித்தலைப்பற்றி நெல்லூர் ஜில்லா போர்டாரின் தீர்மானமாவது :—

17-6-30-ம் தேதி வெளிவந்த ஜி ஓ. நம்பர் 2414 எல். எம். படி ஜில்லா போர்டு உத்தியோகத்தினர் கதர் உடை தரிப்பதைப் பற்றி சந்தேகம் ஏற்பட்டிருப்பதைக் கருதியும் சில கவர்ன்மெண்டு உத்தியோகத்தினர்கள் கதருடை தரித்தல் கூடாதென தீவிரப் பிரசாரஞ் செய்து வருகிறதைக் கருதியும் இந்த ஜில்லா போர்டார் தங்களின் உத்தியோகத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது யாதெனில் அவர்கள் கதருடை தரித்தல் ஆக்ஷேபிக்கக்கூடியதன்று என்பதே.

* * * *

நரசாபுரம் பஞ்சாயத்துத்தலைவர் நீக்கப்பட்டார்.

ஸ்தலஸ்தாபன 1920-ம் வருஷத்திய ஆக்டின் செக்ஷன் 43 உப செக்ஷன் (1) பிரகாரம் சென்னை கவர்ன்மெண்டார் நரசாபுரம் பஞ்சாயத்துத் தலைவர் ம-ா-ா-ஸ்ரீ கெ. எஸ். பிரம்மானந்தம் என்பவரை அந்தஸ்தானத்திலிருந்து அடியிற் கண்ட காரணங்களை முன்னிட்டு நீக்கிவிட்டார்கள். காரணங்களாவன :—(1) 1931-ம் வருஷம் ஜனவரி மாதமுதல் பஞ்சாயத்து மீட்டிங்கே கூட்டாமலிருத்தல் (2) பஞ்சாயத்து மெம்பர்கள் கையொப்பமிட்டு மீட்டிங்கு கூட்டுமாறு கேட்டும் அதைக் கவனியாமலிருத்தல் (3) விசாரணையின்றி பஞ்சாயத்து குமாஸ்தாவை ஸஸ்பெண்டு செய்துவைத்தல் (4) அந்த குமாஸ்தாவை ஸஸ்பெண்டு செய்த விஷயமாயுள்ள தஸ்தாவேஜுகளை அனுப்பும்படி தாலூகா போர்டு தலைவர் கேட்டுக் கொண்டதற்குப் பதிலளியாமலிருத்தல் (5) பஞ்சாயத்தார்களை தேர்ந்தெடுக்கும் பொருட்டு கிராமத்தை வார்டுகளாய்ப் பிரியாமலிருத்தல் அது சம்பந்தமான ரிக்கார்டுகளைப் பஞ்சாயத்தாருக்குத் தெரிவிக்காமலிருத்தல்.

* * * *

திருநெல்வேலி ஜில்லா தச்சநல்லூர் பஞ்சாயத்து போர்டு 4-8-32 வரை ஒரு வருஷத்திற்கு ஸஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறது

* * *

1932௵ மார்ச்சுமீ முடிய வரி விகிதங்களில் மாறுதலில்லை.

கவர்ன்மெண்டார் பின்வரும் ரூலை ஜி. ஓ. எல். எம். 3000-மாகப் பிரசுரஞ் செய்திருக்கிறார்கள்.

(1) 20-8-1930 ல் எந்த லோகல் போர்டு எவ்வித வரிகளை எந்த ரேட்டில் எந்த இடங்களில் வசூல் செய்து வந்ததோ அவ்விடங்களில் அவ்விகிதவரிகளை முன்ரேட்டின் பிரகாரம் 1932 மார்ச்சு முடிய வசூலித்து வரலாம். ஆனால் இவ் உத்திரவுக்கு முன்னே 1930-ம் வருஷத்து ஆக்டு XI (II)ன்படி மதராஸ் லோகல் போர்ட்ஸ் விதிக்கப்பட்ட வரிகளுக்கு இவ்வுத்திரவு செல்லாது.

I. (a) கம்பெனி வரியை லோகல் போர்டார் விதிக்கக் கூடாது.

(b) பஞ்சாயத்து ஏற்பட்டுள்ள சரகத்திலுள்ளவர்களிடமிருந்து தாலூகா போர்டார் தொழில் வரி விதிக்கலாம்.

(2) புதிய லோகல் போர்ட்ஸ் 1930 ம் வருஷத்து ஆக்டு ஏற்படாவிட்டால் எந்தெந்த கம்பெனிகளுக்கு 30-9-31-ம் 31-3-32லும் முடியும் அரைவருஷங்களுக்குப் பழைய 1920 வருஷத்து ஆக்டின்படி லோகல் போர்டுகள் வரி விதிக்கும் உரிமைகளைப் பெற்றிருந்ததோ அக்கம்பெனிகளிடமிருந்து இந்த உத்தரவு I (b)-க்குள் கட்டுப்பட்டு தொழில் வரி அவ்விடமுள்ள ரேட்டு பிரகாரம் விதிக்கலாம்.

(3) இந்த உத்திரவு பிறக்கு முன் லோகல் போர்டார் புதிய லோகல் போர்டு ஆக்டின்படி எவருக்காவது தொழிலவரி விதித்திருந்தால் அவரைத்தவிர (1) புது லோகல்போர்டு ஆக்டின்படி தொழில் வரி முதல் தடவையாக விதிக்கக் கூடும் எவர்க்கும் (2) தொழில் வரி வீட்டுவரி விதிக்கக்கூடாதென்று தள்ளுபடி செய்யப்பட்டிருப்பவர்களுக்கும் 30-9-31 31-3-32 ஆகிய இரு அரைவருஷங்களுக்கும் வரி விதித்தல் கூடாது.

பிரசிடெண்டு ஹூவர் ருஷியாவைப்பற்றி அபிப்பிராயப்படுவது.

அமெரிக்காவிலுள்ள 'யுனைடெட் ஸ்டேட்ஸ்' பிரசிடெண்டு ஹூவர் பெருமான் ருஷியாவின் பொருளாதார நிலைமையைப்பற்றி ஒரு புத்தகமெழுதியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிட்டுள்ள முக்கிய விஷயமாவது :—'பொது உடைமை இயக்கம் பலிக்காது. இதற்கு தற்கால ருஷியநிலைமையே முக்கிய ஆதாரம் என்று கருதுதல் தவறு. ருஷிய ஸோவியட் ஒழுங்கின்படி 10 வருஷங்களில் அங்குள்ள ஜனங்கள் யுனைடெட் ஸ்டேட்ஸிலிருக்கிற பாதி ஏழை ஜனங்களைக் காட்டிலும் வெகு சிறப்பாய் காலக்ஷேபஞ் செய்வார்களென சொல்லலாம்.

* * * *

சீன கவர்ன்மேண்டின் தொழிலிலாகா அத்தேசத்தில் 10 வருஷத்திற்குள் இன்னின்ன தொழில்களை விருத்தி செய்யவேண்டுமென்று ஒரு ஜாப்தா தயார் செய்திருக்கிறது. அந்த ஜாப்தாப்படி, (1) இப்போது தரிசாயிருக்கும் 30 கோடி ஏக்ரா

நிலத்தை விவசாயம் செய்ய உபயோகமாகும்படி பண்படுத்தல், வேண்டிய சௌகரியங்களையமைத்தல். (2) ஆங்காங்கே நல்ல ரஸ்தாக்கள், ரயில் பாதைகள் முதலியவைகளைப் போடுதல். (3) நாட்டின் பல விடங்களில் பெரிய மில்களை யமைத்து அனேக தொழில்களை விருத்தி செய்தல். (4) துறைமுகங்களை ஒழுங்குபடுத்துதல். (5) 80 லக்ஷம் டன் இடையுள்ள சாமான்களை ஏற்றக்கூடிய பெரிய பெரிய வியாபாரக் கப்பல்களைச் செய்தல், அக்கப்பல்களின் எஞ்சின்களின் விசை 50 லக்ஷம் குதிரைகளின் சக்தியுடையதாயிருக்கவேண்டும். (6) வருஷம் ஒன்றுக்கு 3 கோடி டன் நிலக்கரி வெட்டி யெடுக்கப்படுகிறது; இப்பிளானின்படி 20 கோடி டன் நிலக்கரி வெட்டி யெடுக்கப்படவேண்டும். (7) இரும்பு சாமான்கள் 120 லக்ஷம் டன் இடையுள்ளவை செய்யப்படவேண்டும். (8) இவ்வித எல்லாத் தொழில்களின் அபிவிருத்திக்கும் $17\frac{1}{2}$ லக்ஷம்குதிரைகளின் சக்தியுள்ள விசை வேண்டும். இப்பிளானை நடைமுறையில் கொண்டுவர சுமார் $11\frac{1}{4}$ கோடி டாலர் செலவாகும். இவ்விதத் தொழில்களைச் செம்மையாய் நடத்த நுட்பமான அறிவுள்ள வேலையாட்கள் வேண்டும். இவ்வித வேலையாட்களைத் தயார் செய்ய "நான்கிங்ஸ் எஞ்சினீரிங் காலேஜ் ஒன்றை ஸ்தாபித்து அதில் அந்நிய நாட்டிலுள்ள பிரமுக எஞ்சினீர்களை நியமனஞ்செய்து அவர்களைக்கொண்டு சீனர்கள் பலரை எஞ்சினீரிங்கில் பழக்கி வைக்கவேண்டும். இது விஷயமாய் சீன கவர்ன்மெண்டாருக்கு சர்வதேச சங்கத்தார் உதவி செய்யவேண்டுமென்று கேட்க, சர்வதேச சங்க சாஸ்திர ஆராய்ச்சி நுட்பமறிந்த பல நிபுணர்கள் தகுந்த உதவி புரிய இணங்கியிருக்கிறார்கள்.

'பாங்க் ஆப் இங்கிலாண்டு' வெகு செழிப்பான செல்வாக்குள்ள பாங்கி. இந்தப் பாங்கியே தனக்கு ரூ. 75 கோடி கடன் கொடுக்குமாறு 'பாங்க் ஆப் ப்ரான்ஸ்' யூனைடெட் ஸ்டேட்ஸ் பெடரல் ரிஸர்வ் பாங்கி ஆகிய இரண்டு பாங்கிகளையும் கேட்கும் நிலையில் வந்து விட்டது ஆங்கிலேயரின் வியாபாரச் செறுக்கைப் பங்கம் பண்ணினதுபோலாயிற்று என 'நியூ யார்க் நேஷன்' பத்திரிகை கூறுகிறது.

*　　*　　*　　*

மோட்டார் செய்து விற்பதில் பிரபல வியாபாரியாகிய சீமான் போாடு மோட்டார் செய்கின்ற பூடி ராய்ட் சாலை யொன்றை ஆகஸ்டில் மூடி விட்டார். இதற்கு முன் மோட்டார் பாகங்களை 36 விடங்களில் சேர்த்து வந்தனர். இப்போது 11 இடங்களில் மோட்டார் செய்யும் வேலை செய்யப்பட்டு வருகின்றது. வியாபாரக் குறைவின் செல்வாக்கை என்னென்று உரைப்பது!

31-8-31-ல் முடிகின்ற 3-மாதங்களில் பிரிட்டிஷ் இந்திய தொழிற்சாலைகளில் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட தகராறுகள் 52. இவைகளில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் தொகை 1,03,507. மொத்தமாக வேலை செய்யாத நாட்கள் 7,31,223. ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளி சராசரி 12 அணா (அதன் தற்கால மதிப்பு ரூ. 1) வென்று வைத்துக்கொண்டால் இந்த வேலை நிறுத்தங்களால் பிரிட்டிஷ் இந்தியா அடைந்துள்ள நஷ்டம் ரூ. $7\frac{1}{2}$ லக்ஷம் என மதிப்பிடலாம்.

*　　*　　*　　*

இங்கிலாந்தில் தொழிலாளர் கக்ஷி உடைந்துபோனதற்குக் காரணம் பல செல வினங்களைக் குறைக்கவேண்டுமென்ற ஆலோசனைகளே. குறைக்கத் தீர்மானிக்கப் படுமினங்கள் பின் வருவன —

	மில்லியன்.
வேலையில்லாதவர்களுக்குக் கொடுக்கப்படும் இன்ஷ்யூரென்ஸில் ...	£ 66·5
சுரங்கங்களில் வேலை செய்வதால் ஆபத்து நிவாரண இன்ஷ்யூ ரென்ஸின்	£ 1
கல்வி இலாகாவில்	£ 13·6
சம்பளம், பென்ஷன் செலவினங்களில்	£ 4·206
கர்ப்ப ஸ்திரீகளுககுப் பிரசவம் பார்க்கச் செலவில்	£ 1·25

இவைகளைத் தவிர விவசாய இலாகாச் செலவில் குறைவு, வீடு கட்டுதலுக்கு உதவும் கிராண்டில் குறைவு, சாம்ராஜ்ய ஏற்றுமதி இறக்குமதியைக் குறித்து ஆலோசனை சொல்லும் போர்டைத் தள்ளுபடி செய்தல், வேறு பலவிதச் செலவுகளில் குறைவு, இவைபோன்றவைகளும் அடங்கியுள்ளன. இவ்வித சிபார்சு செய்தது கவர்ன்மெண்டால் நியமிக்கப்பட்ட ஓர் கமிட்டி. அக்கமிட்டியிலுள்ள 7 மெம்பர் களில் இருதொழிற்கட்சி மெம்பர்கள் பல சிபார்சுகளை அங்கீகரிக்கவில்லை. ஏனெ னில் இக்குறைக்கப்பட்ட இனங்களில் பல ஏழைகளையே அதிகமாய் பாதிக் கின்றன. மொத்தச் செலவில் குறைக்கச் சிபார்சு செய்யப்பட்டுள்ள தொகை £ 96·5 மில்லியன்.

6½ வட்டிக்குக் கவர்ன்மெண்டு கடன் வாங்குதல் அவசியமா ? வாங்குவதால் என்ன விளையும் ?

(கே. எஸ். முத்துசுவாமி ஐயர்.)

ஸர் புருஷோத்தம் தாஸ் தாகூர் தாஸ் 6½ வட்டிக்குக் கடன் வாங்குதல் அநீதி யென்றும் அவ்விதம் வாங்க நேர்ந்ததே கவர்ன்மெண்டின் தவறான முறை களாலேற்பட்டதென்றும், இக்கடன் தேசப் பொருளாதாரக் கப்பலை திக்கற்ற ஆழ்ந்த சமுத்திரத்தில் கொண்டு தள்ளி விடுமென்றும் அபிப்பிராயப்படுகிறார். ஸர் தாஸ் வெகு நுட்பமான ஆழ்ந்த அறிவாளி, பெருத்த முதலாளி, இவர் பயப் படுவது அதிசயமன்று. இவரைப் போன்ற பெரிய பெரிய முதலாளிகளின் தொழில்கள் இதன் பயனாய் கேடுறும். சாமானியர்களின் நிலைமையும் சடுதியில் கேவலமாய் விடும். இரண்டொரு தொழில்கள் விசேஷப் பெருமை யடையும். அவைகளைத் தாங்கி நிற்போரும் சற்றுக் கௌரவமடைவர். ஏழை மக்களின் நிலை மையை முன் வைத்துக் கவர்ன்மெண்டின் இச்செயலை நாம் ஆராய்வோம்.

கவர்ன்மெண்டு சில சமயங்களில் ஜனங்களிடமிருந்து கடன் வாங்கலாம். இக்கடன் ஜனங்களின் வருவாயை உயர்த்த இன்றியமையாதனவாயிருத்தல் வேண்டும். வேறெவ்விதக் கடனும் உபயோகமான கடன் ஆகாது. நதிகளில் அணைக்கட்டிக் கால்வாய்களை வெட்டி விடுதலுக்குக் கடன் பெறலாம். இதனால் தரிசு நிலம் பயிர் செய்ய உபயோகப்படும் இதனால் ஆயிரக் கணக்கான குடும்பங் கள் பிழைக்கும். ரயில் பாதை போடுவதற்கும், பாடசாலைகளுக்குக் கட்டிடம் கட்டுவதற்கும்' கடன் வாங்குதல் கூட மத்திமமே. இந்தியாயத்தைப் பிரதானமாக

வைத்துப் பார்ப்போமாயின் இந்திய கவர்ன்மெண்டின் கடன் பணங்களில் முக்கால் பாகம் கிரமமாகாது. ஆனால் கிரமமோ, அக்கிரமமோ வாங்கிய கடனைத் தீர்க்க எவ்விதத்திலும் கடமைப்பட்டிருக்கிறது கவர்ன்மெண்டு. ஆகையால் 1931-ம் வருஷத்திய கடனைக் கொடுக்க கவர்ன்மெண்டு செய்யும் முயற்சியை எல்லாத் தேசாபிமானிகளும் ஆதரிப்பது மேன்மையாகும். கடனைத் தீர்க்கக் கடன் வாங்குதல் மட்டும் ஒரு முறையன்று. (1) கவர்ன்மெண்டு பல சிக்கன வழிகளைக் கையாண்டு கடனில் ஒரு பாகத்தை யொழிக்கலாம். (2) சில உயர் வருமானமுள்ளவர்களை அதிக வரி கொடுக்குமாறு சட்டஞ் செய்து வசூலிக்கலாம். (3) உள்நாட்டு உயிர்ப்பொருள்கள் மேன்மேல் செழிக்குமாறு வழி தேடுதல். (4) அன்னிய நாட்டினர்களுடன் நட்பாய்ப் பழகிக்கொண்டு யுத்தத் தளவாடச் செலவு வகைகளைக் குறைத்தல், (5) கவர்ன்மெண்டின் நடவடிக்கைகளைக் கவனித்து ஜனங்கள் டம்பச் செலவுகளை யொழிக்கும்படி தெரிவித்தல். (6) அநேக பெரிய பெரிய விஷயங்களில் ஜனங்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்று கவர்ன்மெண்டின் செலவைச் சுருக்கிக்கொள்ளல், இவைபோன்ற பலவகைகள் உண்டு. இவைகளின் மூலமாய் கவர்ன்மெண்டிற்கும், ஜனங்களுக்கும் அதிகக்கஷ்டமின்றி ஒருபாகக் கடனைக் கொடுத்தல் சாத்தியமாகும். மிகுதியாயுள்ள தொகையைக்கொடுக்க அதே வட்டிக்கோ அல்லது சொற்ப வட்டிக்குறைவிலோ, ஜனங்களிடம் கடன் வாங்குதல் முன் சொல்லப்பட்ட முறையில் சாத்தியமாகும். அப்போது பொருளாதார நிலை மாறுபடாது.

(1) 6 வட்டியிலுள்ள கடனைத்தீர்க்க $6\frac{1}{2}$ வட்டிக்குக் கடன்வாங்குதல் பல வகைகளில் அநேகருக்குத் தீங்கிழைப்பதுமன்றி சில பணமுள்ளவர்களை உயர்த்தவும் செய்கிறது. எவ்விதமெனில் $3\frac{1}{2}$, 4, $4\frac{1}{2}$, 5, $5\frac{1}{2}$, 6 வட்டி விகித பாண்டுவைத்திருப்போரின் முதல் குறைந்துவிடும். ரூ. 100 பாண்டுகளின் விலை 55 லிருந்து 95 வரை குறுகிவிடுகிறதல்லவா? சென்றவருஷத்தில் 1933ம் வருஷத்திய 6 வட்டி பாண்டின் விலை ரூ. 102 ஆகவிருந்தது. இப்போது 97க்கு வந்துவிட்டது. ஆகவே இவ்வருஷத்தில் விற்க நினைப்பவர் ஒவ்வொருபாண்டின்மேலும் ரூ. 100க்கு ரூ. 5 நஷ்டமடைகிறார். இம்மட்டுமா? இதன்மூலமாய் கவர்ன்மெண்டிற்கு வருமான வரியின் மூலமுள்ளவருவாய் குறைந்துபோம். ஏனெனில் இப்பாண்டுகளின் நஷ்டத்தொகை பாலன்ஸ்ஷீட்டில் செலவு இனத்தில் காட்டப்படும். அப்போது லாபம் குறைந்துபோம். அதிலிருந்து வருமான வரியும் குறையும். பெரிய தொழிலாளிகள், வியாபாரிகள் சிலசமயம் இப்பாண்டுகளை அடமானம் வைத்துப் போதியக் கடன்களைப் பெறுதல் வழக்கம். இப் பாண்டுகளின் விலை குறைவாயிருப்பதால் அடமானத்தின்மேல் இவர்கள் பெறும் தொகையும் குறைவாகவேயிருக்கும். இக் காரணம்பற்றி தொழிலாளர், வியாபாரி அதிக கடனேற்படாமலிருக்கும் பொருட்டுத் தங்கள் பொருள்களைச் சொற்ப லாபத்திற்கோ அல்லது அசலுக்கோ விற்கும்படி தூண்டும். பெரிய தொழில்கள் வியாபாரங்கள் செழிப்பின்றித் தயங்குமாயின் வேலைக்காரர்களின் சம்பள விகிதம் குறையலாம். அதிருப்தியும் அமைதியின்மையும் அதிகரிக்கும்.

(2) பாங்கிகளின் வட்டி விகிதங்கள் உயரும். ஒரு நாட்டுத் தொழில் வியாபார செழிப்பிற்குப் பாங்கிகளே முக்கிய ஆதரவு. இப் பாங்கிகளில் இப்போது

$4\frac{1}{2}$, 5, $5\frac{1}{2}$ வட்டிக்கு டிபாஸிட்டுகள்பெற்று 7, $7\frac{1}{2}$, 8 வட்டிகளுக்கு வியாபாரிகளுக்குக் கடன் கொடுத்து வருகிறார்கள். கவர்ன்மெண்டு $6\frac{1}{2}$ வட்டிக்குக் கடன் வாங்கவே இப் பாங்கிகளிலுள்ள டிபாஸிட்டுகளில் பெரும்பாகம் கவர்ன்மெண்டு பாண்டு வாங்க உபயோகமாகும். பாங்கிகளில் டிபாஸிட்டுகள் குறையவே அவர்கள் வெளியார்க்குக் கொடுத்திருக்கிற கடன்களை வசூலிக்கவேண்டிவரும்; அவ்விதம் வசூலித்தல் எளிதில் சாத்தியமன்று. தாங்கள் கொடுக்கவேண்டியதைக் கொடுக்கவும் வேண்டும். தங்களுக்கு வரவேண்டிய பொருள் இலகுவில் வரவுமாட்டாது. இந்நிலைமையில் பாங்கிகள் தங்களது செல்வாக்கைக் காப்பாற்றிக்கொள்ள அதிகவட்டி கொடுத்து டிபாஸிட்டுக்களைப் பெறுவர். இப்போது கவர்ன்மெண்டோடு பாங்கிகள் போட்டியிடும். இதில் ரொக்கப் பணமுடையவர் லாபமடைவர். தொழில்கள், வியாபாரங்கள் அதிக வட்டிகொடுக்க முடியாமல் சில நாசமடையும். சில செழிக்காமல் நிலையில் நிற்கும். இதனாலும் தொழிலாளரே சிரமமடைவர்.

(3) அநேக நடுத்தர வருமானமுள்ளவர்கள் தாங்கள் மிகுத்த பொருளை நிலத்திலும் வீட்டிலும் சேமித்துவைத்திருக்கிறார்கள். விலைவாசிக்குறைவால் நில வருமானம் அனேகருக்குப் போதாமலிருக்கிறது. அப்போது அவர்கள் கடன் வாங்க நேரிடுகிறது. அக்கடனுக்கு அதிகவட்டிகொடுக்க நேரிடுவதும் சகஜம். சிலர் இக்கஷ்டத்தைச் சகிக்க முடியாமல் நிலத்தையே விற்க முயல்கின்றனர். வாங்குபவர் இல்லை. ஏனெனில் நிலத்தில் 3 வட்டிகூடக் கிடைக்கிறதில்லை. ஆகவே 1929-ல் ரூ. 2,000-க்கு வாங்கிய நிலத்திற்கு 1931-ல் ரூ. 1,000-ம்கூடக் கிடைப்பது அரிதாய்விடுகிறது. பட்டணங்களில் வாடகைகள் குறையாவிடினும், வீட்டில் 5 வட்டிக்குமேல் கிடையாததால் வீடுகளை வாங்குவோர் வெகு குறைவு. ஆகையால் வீடுகளுக்கும் மதிப்பு குறைந்துபோயிற்று. இந்த $6\frac{1}{2}$ வட்டிவிகிதம், நிலம் வீடுகளின் விலையை பாதிக்கும், குறைவாகச் செய்துவிடும்.

(4) அனேக பண்டுகள், நிதிகள், கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கூட்டுறவு அடமான பாங்கிகள் இப்போது டிபாஸிடர்களுக்கு 6 வட்டி வழங்கிவருகிறது. இந்நிதிகளிலிருந்து சந்தாதார்கள் $6\frac{1}{2}$, 7, $7\frac{1}{2}$ வட்டிக்குக் கடன்பெற்று சொற்பசொற்பமாய் அக்கடன்களையும் தீர்த்துவருகிறார்கள். இந்த $6\frac{1}{2}$ வட்டி விகிதத்தால் டிபாஸிடர்களின் தொகை குறைந்துபோவதுமன்றி டிபாஸிட்டுத் தொகையும் குன்றும். இத்துடன் நில்லாமல் இவர்கள் கொடுத்திருக்கும் கடன் அடமானச் சொத்துக்களின் விலை குறைவாயிருப்பதால், இவைகளின் செல்வாக்கும் பலபடி குன்றி இவை தவிக்கும் நிலைமைக்கும் வரலாம்.

(5) தேசத்திலுள்ள அதிகமான பணம் கவர்ன்மெண்டுக்குக் கடனாக வழங்கப்பட, ஏராளமான பொருள்கள் வட்டியாகவும், பென்ஷனாகவும், சம்பளமாகவும், எக்சேஞ்சாகவும், வெளிநாடு செல்ல கவர்ன்மெண்டின் நிர்வாகமுறைக்கு அன்னியச் சரக்குகள் அவசியமாயிருக்க, நம்தேசக்கடன் எவ்விதம் பார்க்கினும் நமக்கு அது ஓர் பெரும் பாரமாகவேமுடியும். ஒரே நாட்டிலுள்ள A B இடங்களிலிருந்து கடன் வாங்கி C, D, E-க்குக் கடன்கொடுத்தால் ஒருவேளை அக்கடன் அவ்வளவு பாதகமாகவும் தோன்றாது. ஏனெனில் C, D, E இடமிருந்து A, B மறுபடியும் கொஞ்சம் உதவி பெறலாம். அன்னிய நாடுசென்ற பணம் திரும்பி நமக்குவரப் பலவித துன்பம் நேரிடும். ஆகவே எவ்வகையில் பார்க்கிலும் $6\frac{1}{2}$ வட்டிக்கடன் நம்

நாட்டின் செழிப்பைக் கெடுக்துவிடும். ஏழைகளின் துயரம் அதிகரிக்கும். ஆனல் இது சிலரை உயர்த்தும். கவர்ன்மெண்டில் உயர் உத்தியோகம் பெறுபவர்கள் கவர்ன்மெண்டுக்குச் சாமான்களை சப்ளைசெய்வோர் இன்சூரென்ஸ் கம்பெனியார்கள், ரொக்கம் முதல் வைத்திருப்போர்கள், மாதச் சம்பளகாரரில் சிலர், வெகு லாபமடைவர். உற்று நோக்கில் இந்நிலைமை கவர்ன்மெண்டின் செல்வாக்குக்கு ஹானியுண்டுபண்ணக்கூடியது. இந்நிலைமையிலிருந்து நீங்க கவர்ன்மெண்டு தீவிரமான முயற்சியெடுத்துக்கொண்டு ஜனங்களுக்குள் சமாதானம் நிலவும்படி செய்யவேண்டுவது அதின் முதல்க்கடமையாகும்.

கிராம அபிவிருத்தி பண்டு.

(இவ்விஷயத்தைக் குறித்துச் செங்கற்பட்டு ஜில்லாபோர்டு எஞ்சினீர் மிஸ்டர் தானியல் எழுதியுள்ள வியாஸத்தின் ஓர் பகுதியின் மொழிபெயர்ப்பு),

புதிய லோகல்போர்டு ஆக்டின்படி இந்த பண்டுப்பணத்தை கீழேகுறிக்கப் பட்டுள்ள மூன்று இனங்களிலேயே செலவிடலாம்.

(1) கிராம ரஸ்தாக்களைப் போடுதலும், போடப்பட்டவைகளைக் காப்பாற்றலும்.

(2) கிராமத்தாருக்குக் குடிதண்ணீர் சப்ளைசெய்தல்.

(3) கிராமச் சுகாதாரம், மலேரியா, விஷசுரம், வாந்திபேதி இவைகளைத் தடுத்தல், ஆஸ்பத்திரிகளை வைத்து நடத்தல் இவைபோன்ற விஷயங்களைக் கவனித்தல்.

வரவு செலவுதிட்ட சம்மந்தமான ரூல்களின் கீழுள்ள ஷெடியூல் 5-ல் கிராமப் பஞ்சாயத்துக்கள், தாலூகாபோர்டுகள், ஜில்லா போர்டுகள், ஒவ்வொன்றும் இவைகள் எல்லாவற்றையுமோ அல்லது சில இனங்களையோ நடத்தும் உரிமைகளைப் பெற்றிருக்கின்றன. ஆகையால் இவ்வித உரிமை மூன்றுஸ்தாபனங்களுக்குமிருப்பதால் நடைமுறையில் காரியங்கள் ஒன்றுக்கொன்று அனுகூலமாயோ, உதவியாகவோ, பொருத்தமாகவோ நடைபெறுகின்றனவா அல்லது ஒரு ஸ்தாபனவேலைகளையே மற்றஸ்தாபனங்களும் செய்ய முயற்சிக்கின்றனவா? இதனல் ஏதாவது தடுமாற்றம் இவைகளுக்குள் உண்டாகக்கூடுமாவென்ற விஷயத்தை நாம் ஆராய்ச்சி செய்தல் அவசியம். முதலில் கிராம ரஸ்தாக்களைப்பற்றிக் கவனிப்போம். ஸெக்ஷன் 5-ன்படி பஞ்சாயத்துக்கள், தாலுகாபோர்டுகளின் ஜில்லாபோர்டின் எல்லைக்குள் அகப்படாத அப்பஞ்சாயத்துக்களின் சரகங்களில்மட்டும் ரஸ்தாக்களைப்போடவும், போட்டிருக்கும் ரஸ்தாக்களைக் காப்பாற்றவும் உரிமை உண்டு. இவ்வித பஞ்சாயத்துக்களின் வேலை திட்டமாய் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதேமாதிரி தாலூகாபோர்டார் எந்தக்குறிப்பிட்ட எல்லைக்குள் தங்கள் பண்டிலிருந்து ரோடுகள் போடலாமென்ருவது ஜில்லாபோர்டு கிராம அபிவிருத்திபண்டிலிருந்து எங்கெங்கே ரோடுகள் போடவேண்டுமென்றும் சரியான திட்டமொன்றும் ஆக்டில் இல்லை. இதைக்குறித்து திட்டமான பைலாக்கள் ஏற்படாமற்போனல் ஒரு போர்டு செய்ய உத்தேசித்திருக்கிற செயலை மற்ற போர்டாரும் செய்ய ஏற்பாடுசெய்ய

லாம். இவ்விதமேற்படாமலிருக்கப் பின்வரும் ஆலோசனைப்படி நடத்தல் உசிதமெனத் தோன்றுகிறது.

(1) ஜில்லா ரோடுகளிலிருந்து கிராம அபிவிருத்திப்பண்டுத் தொகையிலிருந்து ஜில்லாபோர்டார் யாத்திரை ஸ்தலங்களுக்கு, சந்தை நடக்குமிடங்களுக்கு, உத்ஸவாதி நடக்குமிடங்களுக்கு, ரயில்வேஸ்டேஷன்களுக்குப் புதிய ரோடுகளைப் போடலாம்.

(2) ஒரு ஜில்லா ரோட்டிலிருந்து மற்றோர் ஜில்லா ரோட்டிற்கு அனேக கிராமங்களின் மத்தியாய், குறுக்காய் ஒரு ரோட்டைப் போடலாம்.

(3) ஓர் ஜில்லாவில் ஜனசாரமும் பயிர்பச்சையுமில்லாத விடங்களின் வழியாய் நீண்ட ரோடுபோடவேண்டியதாயிருப்பின் அதைப்போடுதல்.

கவர்ன்மெண்டு ரோட்டுகளுக்காகக் கொடுக்கும் கிராண்டை தாலூகா போர்டுகளுக்குக் கொடுக்காமல் இனிமேல் கிராம அபிவிருத்தி பண்டுக் கமிட்டியாரிடம் ஒப்புவிப்பதே நலம். ஏனெனில், எஞ்சினீரிங்கில் நுட்ப அறிவுள்ளவர் தாலூகா போர்டின் அலுவலில்லை. மேலும், கிராம அபிவிருத்திக் கமிட்டியில் தாலூகா போர்டுத் தலைவர்கள் அங்கத்தினரா யிருக்கின்றனர். ஆகையால், இனிமேல் தாலூகா போடுகளுக்குத் தனித்தனியாக கிராண்டு கொடுக்கவேண்டியது அவசியமெனத் தோன்றவில்லை. தாலூகா போர்டார் தாங்கள் இதுவரை போட்ட ரோட்டுகளை ஒழுங்காய்க் காப்பாற்றுவதிலும் வெகு அவசியமெனத் தோன்றினால் போர்டு வருமானத்திலிருந்தே சொற்ப ரோடுகளைப் போடுவதிலும் கருத்தைச்செலுத்தவேண்டுமென தீர்மானித்துக்கொள்ளுதல் உசிதம். தாலூகா போர்டு சரகத்தில் ஆங்காங்கே கூடிய சீக்கிரத்தில் பஞ்சாயத்துக்கள் ஏற்படுமாகையால் சொற்ப நீளமுள்ள ரஸ்தாக்களைப் போட்டுக் காப்பாற்றும் பொறுப்பும் செலவும்கூட தாலூகா போர்டாருக்குக் கொஞ்ச வருஷங்களில் நீங்கிப்போகும்.

ஜலசப்ளை விஷயமாக செக்ஷன் 5-ன்படி பஞ்சாயத்துக்கள் தங்கள் சரகங்களில் கிணறுகள், குளங்கள் வெட்டவும் உள்ளவைகளை ரிப்பேர் செய்து வைத்துக் கொள்ளவும் உரிமை பெற்றிருக்கின்றன. தாலுகா போர்டார் தங்கள் சரகத்தில் இம்மாதிரி செய்யலாமென்ற திட்டமொன்றும் ஆக்டிலில்லை. ஆகையால், தாலூகா போர்டார் பஞ்சாயத்து இல்லாத கிராமங்களிற்காகக் கிணறு, குளம் வெட்டவும், அவைகளைக் காப்பாற்றவும் தக்க அதிகாரம் பெறவில்லை. (இவ்வபிப்பிராயம் சரியெனச் சொல்ல முடியாது. செக்ஷன் 6 (2)-ல் 2-வது கண்டிஷன்படி பஞ்சாயத்து இல்லாத விடங்களில் தாலூகா போர்டு பஞ்சாயத்து வேலைகளைச் செய்யலாம்.—பத்திராதிபர்.)

ஜலசப்ளைக்காகத் தாலூகாபோர்டார் கவர்ன்மெண்டாரிடமிருந்து கிராண்டு பெறுவாராயின் அந்த கிராண்டு கிராம அபிவிருத்தி பண்டோடு சேர்க்கபபடவேண்டும். தாலூகாபோர்டு சரக ஜலசப்ளைவிஷயமான காரியங்களை கிராம அபிவிருத்தி போர்டார் கவனித்துவரவேண்டும். இக்காரணம்பற்றியே சென்றவருஷத்தில் அறைகுறையாயுள்ள கிணற்றுவேலை, குளவேலை பூர்த்தியாகும் பொருட்டு அவைகளைக் கிராம அபிவிருத்திக் கமிட்டியாரிடமே தாலுகாபோர்டார் இவ்வரு

ஷத்தில் ஒப்புவித்துவிடவேண்டும். (இவ்விஷயமாய் கவர்ன்மெண்டு தெளிவான உத்திரவை இனியும் பிறப்பிக்கவில்லை.)

(3) சுகாதாரவிஷயமாய் பஞ்சாயத்தார் சகல உரிமைகளையும் பெற்றிருக்கின்றனர். தாலூகா போர்டார்களுக்குள்ள உரிமை ஒன்றுமேயில்லையெனச் சொல்லலாம். இச்சுகாதார விஷயத்தில் விஸ்தாரமான உயர்ந்த கொள்கைகள் அனுஷ்டிக்கப்பட்டாலன்றி கிராம அபிவிருத்தி கமிட்டி அலுவல்களுக்கும், பஞ்சாயத்து அலுவல்களுக்கும் ஒன்றுக்கொன்று சம்மந்தமின்றி தடுமாற்றம் ஏற்படும். தனித்தனி பஞ்சாயத்துக்கள் செய்யமுடியாத காரியங்களை கிராம அபிவிருத்திக் கமிட்டியார் எளிதில் செய்யக்கூடுமாகையாலும், அதிலும் சேர்ந்தாற்போலுள்ள பல கிராமங்களின் சுகாதார சம்மந்தமான பொதுக்காரியங்கள் பல ஏற்படுமாகையாலும் இவ்வேலையை கிராம அபிவிருத்திக்கமிட்டியாரிடம் ஒப்புவித்தல் நலம். அவ்விதப் பொதுக்காரியங்களாவன:

(1) தொத்துவியாதிகளைத் தடுத்தல், அவைகளை யொழிக்க முயற்சித்சல்.

(2) பிரசவம்பார்த்தல், குழந்தைகளைக் காப்பாற்றல் போன்ற விஷயங்களைக் கவனித்தல்.

(3) பள்ளிக்கூட உபாத்தியாயர்கள், கிராமப்பொதுநல ஊழியஞ்செய்ய விருமபுவோர் இவர்களுக்கு கிராமச்சிக்கன முறைகளைக் கற்பிக்கப் பாடசாலைகளை ஏற்படுத்தல்.

(4) விவசாயக் கருவிகளைப் பொதுவிடத்தில் வைத்து உபயோகிக்க வழங்குதல்; நல்ல விதைகளைப் பொறுக்கி யெடுத்து கிராமத்தாருக்கு விற்றல்; உயர்ந்த எருதுகளை வைத்து வளர்த்தல்.

(5) ஸினிமாப் படங்களைச் செய்து வைத்து அதன் மூலமாய்ப் பல சுகாதார விஷயங்களைக் கிராமத்தாருக்குக் கற்பித்தல்; உற்சவ காலங்களில் மோட்டார் லாரிகளின் மூலமாய் சுத்த ஜலத்தை உற்சவம் நடக்கும் ஊராருக்குச் சப்ளை செய்தல்; நல்ல கிரந்தங்களை ஊர ஊராய்க் கிராம ஜனங்கள் வாசிக்குமாறு உதவுதல்.

(6) பஞ்சாயத்து ஏற்படாத ஊர்களில் ஜனங்கள் சுகமாய்க் குடியிருக்கச் சுகாதாரமுள்ள நிலங்களைப் பண்படுத்தல்.

(7) ஜில்லா ஸ்கவுட் ஆபீஸரின் உதவியைக்கொண்டு கிராமந்தோறும் ஸ்கவுட் ஸ்தாபனங்களை ஏற்படுத்தல்.

(3) மற்றும் கிராம ஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்தல்.

பண நெருக்கடியும், கிராமக் கூட்டுறவுச் சங்கங்களும்.

ஸ்ரீமான் ராவ் பகதூர் வ வேதாசலமய்யரவர்கள், மாஜி கூட்டுறவு இலாகா ரெஜிஸ்திரார் எழுதியுள்ள வியாஸத்தின் ஸாராம்சம்.)

இப்போதுள்ள தேசப் பண நெருக்கடியில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் மெம்பர்களிடமிருந்து அசலிலோ, வட்டியிலோ, சொற்பத் தொகைகளை வசூலித்தல் வெகு கஷ்டமானது. பண வசூலுக்காகவே மத்திய பாங்கியார் கவர்ன்மெண்டார் பல சிப்பந்திகளை நியமித்திருப்பினும் பணம் வசூலாகுமென எதிர்ப்பார்க்க முடியாது.

உணவுப் பொருள்களின் விலை, மற்றும் பொருள்களின் விலை நேர் பாதியாயிருக்கிறது. அதிக மழை பெய்ததாலும், வெள்ளச் சேதமேற்பட்டபடியாலும் விளைவும் குறைந்து போயிற்று. அநேகரைப பொருத்தமட்டில் விளைந்த மாசூல் பொருள்களின் விலை அவர்கள் கொடுக்கவேண்டிய கிஸ்திப் பணத்திற்கே போதாது. சொந்தக்காரர்கள் நிலத்தை விற்க முயன்றால் அதை வாங்கப் பணமுள்ளவர்களில்லை. இதே காரணம்பற்றி கோர்ட் மூலமாய் அடமான சொத்துக்களை ஏலத்திற்குக் கொண்டுவருவதிலும் லாபமில்லை. சொந்த லேவாதேவி செய்வோரிடமும் பணமில்லை. அவர்கள் கடன்களைக் கொடுப்பதையும் நிறுத்திக்கொண்டு விட்டார்கள். ஆகையாலே கூட்டுறவுச் சங்க மெம்பர்கள் வேறுவழிகளின்றிக் கடனைத் தவணைப்படி கொடுக்கத் தவறியவர்களாயிருக்கின்றனர். இவ்விதக் கஷ்டத்திலிருந்து விடுதலையடைய ஒரே வழிதான் உண்டு. அதாவது கடன்கொடுக்க வேண்டிய தவணைக்காலத்தை அதிகக்காலத்திற்கு மாற்றுவதே. இவ்வித அதிக காலத்தவணையைக் குறிப்பிடுவதற்கு ஒவ்வொரு அங்கத்தினரும் வருடா வருடம் எவ்வளவு மிகுதிவைக்கக்கூடுமெனத் திட்டஞ்செய்யவேண்டும். இப்போதுள்ள பண நெருக்கடி எத்தனை வருஷங்களுக்குத் தொடரலாமென்பதையும் முன்னதாகவே நிதானித்தும் காலத்தவணையை ஒத்திப்போடவேண்டும். தவணைகளுள் பணம் செலுத்தத் தவறுகிறவர்களை அடியிற்கண்டவாறு பிரித்து அவரவர்களின் தன்மைகளுக்குத் தக்கவாறு முறைகள் அனுஷ்டிக்கப்படவேண்டும்.

(1) ஸ்தாவர சொத்துக்களை அடமானஞ்செய்திருக்கிற மெம்பர்கள் சம்மந்தப்பட்ட மட்டில், அவர்கள் சொற்பகாலத் தவணைக்குள் அசல் வட்டியைக் கொடுக்க அசக்தர்களாயிருப்பின் அவர்களுக்கு நீண்டதவணை கொடுத்து சொற்பம் சொற்பமாய் அசல்வட்டிகளை 10 முதல் 20 வருஷம்வரை செலுத்துமாறு செய்யலாம். ஆனால் அடமானச் சொத்தின்மேல் வேறு வில்லங்கனங்கள் ஏதுவும் இருக்கக்கூடாது. இம்மாதிரி அதிககாலத் தவணைக்குத் தக்கபொருள் உதவியை ‘மத்திய பாங்கியார்’ கிராமக்கூட்டுறவு சங்கங்களுக்கு உதவவேண்டும். மத்தியபாங்கிக் கணக்கில் ‘கிராமச்சங்கத் தவணைபாக்கி’ என்று குறிப்பிட்டிருப்பதை அதிகத்தவணைக்கு அச்சங்கத்திற்குக் கடன்கொடுத்திருப்பதாகக் காட்டி வரவுவைத்துக்கொள்ளவேண்டும். மத்திய பாங்கியார் தவணையை யதிகரிக்கும்போது அடமானப்பொருள்களின் தஸ்தாவேஜிகளையும், விலைகளையும் நன்றாய்க் கவனிக்கவேண்டும். பஞ்சாயத்துக்கள் அந்த தஸ்தாவேஜிகளை மத்தியபாங்கியார் வசமே ஒப்புவித்துவிடவும்வேண்டும்.

(2) மெம்பர்கள் ஸ்தாவரசொத்துக்களை கிராமச் சங்கங்களுக்கு அடமானஞ் செய்தபின் வில்லங்கனங்கள் செய்திருப்பார்களாயின் அச்சொத்துக்களை ஸிவில் கோர்ட்டு மூலமாய் உடனே ஏலத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

(3) ஒரு மெம்பர் ஸ்தாவர சொத்துக்களை அடமானஞ் செய்திருந்தபோதிலும், அவர் தம்மின் சொத்தின் ஓர்பகுதியை விற்றாலன்றி வேறெவ்விதத்திலும் அசல் வட்டியைக் கொடுக்க அசக்தராயிருப்பின் அவருக்கு அவ்விதம் அவரது சொத்தை விற்றுக்கொடுக்குமாறு தவணையை 2, 3 வருஷங்களுக்கு அதிகப்படுத்திக்கொடுக்கலாம்.

(4) ஆண்டிமாண்டின்மேல் வேறொருவர் இருவரின் மேலொப்பத்துடன் ஒரு மெம்பர் ரூ. 100-க்கு மேற்படாத கடன்வாங்கியிருந்து அக்கடனில் அசல் வட்டி தவணைப்படிக் கொடாமலிருப்பாராயின், அவர் அவருடன் கையொப்பமிட்டவர், போதிய அந்தஸ்துடையவராயிருப்பின் அம்மெம்பரின் தவணையையும் ஒரு வருஷத்திலிருந்து மூன்று வருஷங்கள்வரை அதிகப்படுத்திக் கொடுக்கலாம். ஆனால் கடன்தொகை ரூ. 100-க்கு மேற்பட்டதாயிருப்பின் அக்கடன் வாங்கியவரிடமிருந்து அடமானமாக எதையாவது வாங்கவேண்டும். இதரக் கடன் பாக்கியுள்ளவர்களிடமிருந்து கோர்ட்மூலமாய் அசல்வட்டியை வசூலிக்க முற்படவேண்டும்.

இவ்வித முறைகளை அனுஷ்டிப்பதால் ஏராளமானபணம் நீண்டதவணையில் அடமானக்கடனாய் அமுங்கிப்போய்விடுமென்பது உண்மை. ஆனால் இந்நெருக்கடியில் வேறெந்த ஆலோசனையும் சாத்தியமானதாகத் தோன்றவில்லை. இவ்வித நீண்டகாலத் தவணையில் எவ்வளவு பணம் அடங்கிக்கிடக்கலாமென்பதை யாராய்வோம்.

(1) மத்தியபாங்கியின் ரிஸர்வ், கிராமச்சங்கங்களின் 'ரிஸர்வ்' மெம்பர்களின் பங்குப்பணம் ஆகிய தொகைக்குள்ள பணம் நீண்டகாலத் தவணைக் கடனாயிருக்கலாம்.

(2) கிராமச் சங்கங்களிலிருந்து வரும் ஸ்தாவர அடமானச்சொத்துக்களின் மேல், மத்திய நில அடமனபாங்கியார் 10 வருஷம்முதல் 20 வருஷம்வரை எவ்வளவு பணம் கால நெருக்கடியைக்கருதி வெகு சௌகரியமாய் மத்திய பாங்கிகளுக்கு எவ்வளவு கடன்கொடுக்க முன்வருகிறதோ அவ்வளவு தொகைவரை தவணையை ஒத்திவைக்கும் காலங்களை மத்தியபாங்கியார் உயர்த்தலாம்.

(3) சங்கங்களைச் சீர்திருத்தி நேர் வழிகளில் அமைத்துவைக்கும்பொருட்டு ஏற்பட்டுள்ள கூட்டுறவு உத்தியோகத்தினர்கள் இம்முறையை அனுசரித்துக் கடன் தவணையை உயர்த்த மத்திய பாங்கியாரிடமிருந்து அதிகாரத்தை முன்னதாகவே பெற்றுக்கொள்ளவேண்டும்.

(4) சங்கப் பணத்தைக் கையாளுகிற விஷயமாகவும், பொய்யான அல்லது மலரணையான செல்லத்தகாத பாண்டுகளை எழுதிவைத்துக் கடன் பெறும் விஷயமாகவும, கோர்ட்டுக்குப் போவதையே கருதி நடவாமல், முக்கியஸ்தர்கள் சேர்ந்து இவ்விஷயங்களை விசாரித்து, யார் யாரிடமிருந்து எத்தொகைகள் வசூலிக்கப்படவேண்டுமென்று தீர்மானித்து, அவ்விதம் அவர்களிடமிருந்து அடமான பாண்டுகளை வாங்குதலே நலம். (பாண்டு கொடுக்கும் மெம்பரின் சொத்தும் வருமானமும், அக்கடனைத் தீர்க்கக்கூடிய அளவில்லாமலிருப்பினும் அவ்விதம் செய்தலே உசிதம்.) இக்கடனை அவர் தீர்த்தாலன்றி அவருக்கு குறுகிய தவணைக் கடனோ, நீண்ட காலத் தவணைக் கடனோ, வேறு ஜாமீன்தாராகவோ இருக்கும் உரிமையே அவருக்குக் கொடுத்தல் கூகாது. போலீஸ் கோர்ட்டிற்குப் போகுதல். கிராமச் சங்கங்கள் சம்பந்தப்பட்டவரையில் சொத்துக்களை வில்லங்கனஞ் செய்தவர்களுக்குத் தப்பித்துக்கொள்ள ஓர் வழியாக உதவுகிறது. (எனெனில், சங்கங்கள் உடனே உலையும், அன்லிமிடெட் மெம்பர்களில் பலர் தப்பித்துக்கொள்ள இடமுண்டு.)

மத்திய பாங்கிக் கமிட்டியாரின் சிபார்சுகள்.

இந்தியா கவர்ன்மெண்டார், 1929-ல் இந்தியாவிலுள்ள பாங்கிகள் இந்தியத் தொழில்கள், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம், உள்நாட்டு வியாபாரம், தேசச் செல்வச் செழிப்பு, இவைகளுக்கு எவ்வித அனுகூலமுள்ளவையாயிருக்கின்றன? அதிகமான பயனை யளிக்கக் கவர்ன்மெண்டும், பாங்கிகளும் என்னென்ன முறைகளை யனுஷ்டிக்கவேண்டுமென்ற விஷயங்களை விசாரித்துச் கவர்ன்மெண்டுக்கு ஒரு ரிப்போர்ட்டை யனுப்பும்படி ஓர் கமிட்டியை நியமித்தனர். அக்கமிட்டியில் பலவகைப்பட்ட பாங்கிப் பிரதிநிதிகள், வியாபாரிகள், கவர்ன்மெண்டின் வியாபார இலாகா மெம்பர், ஆக 21 மகான்கள் சுமார் 18 மாதங்களாய்ப் பல பல உயர்ந்த வியாபாரிகளை விசாரித்தனர். அன்னிய நாடுகளில் பாங்கிகளை நடத்தும் 5 பிரமுகர்களும் இவர்களுடன் கலந்துகொண்டனர். மாகாணந்தோறும் ஒவ்வோர் பாங்கிக் கமிட்டி அம்மாகாண சம்மந்தமான விஷயங்களை விசாரித்து ரிப்போர்ட்டு செய்திருந்தனர். இவ்வித உதவிகளுடன் தங்களுக்குத் தோன்றிய அபிப்பிராயங்களையும், சிபார்சுகளையும், அக்கமிட்டியார் சில மாதங்கட்குமுன், கவர்ன்மெண்டுக்கு ஓர் ரிப்போர்ட்டு மூலமாய்த் தெரிவித்திருக்கின்றனர். அதன் சாராம்சம் செப்டம்பர் மீ 16உயில் பிரசுரமாயிருக்கிறது.

கிராமத்தார்கள் கவனிக்கவேண்டிய சில அம்சங்கள்மட்டும் இங்கே குறிப்பிடப்படும்.

(1) நில அடமான பாங்கிகள் அநேகம் ஏற்பட கவர்ன்மெண்டு நேரிலோ, மற்ற பாங்கிகள் மூலமாகவோ உதவி செய்யவேண்டும்.

(2) பெரிய கிராமங்களில் 'அர்பன் பாங்கிகள்' ஏற்படவேண்டும்.

(3) நிலஸ்வான்கள், குடியானவர்கள், தங்கள் மாசூல் பொருள்களை நல்ல விலைக்கு விற்க மத்திய ஸ்தலங்களில் கிடங்குகளைக் கட்ட உதவி செய்யவேண்டும்.

(4) பாகமாகாத இந்து மகம்மதியர்களின் நிலங்களை அடமானம் வைத்தால் அவைகளின் மேல் பாங்கியார்கள் தகுந்த பணம் கடன் கொடுக்குமாறு கவர்ன்மெண்டு சில வசதிகளைச் செய்யவேண்டும்.

(5) கிராமங்களில் அதிக வட்டிக்குக் கடன் கொடுக்கும் லேவாதேவித் தொழில் செய்வோரைத் தடுப்பதை விட, இப்போது பஞ்சாப்பில் அமுலிலிருந்து வரும் சட்டங்களை மற்ற மாகாணங்களில் செய்தும் அதிக வட்டிகளைக் கண்டிக்கவென ஏற்பட்டிருக்கும் சட்டத்தைக் கண்டிப்பாய் அனுஷ்டித்தும் வந்தால் அதிக வட்டிக் கடன்கள் நீங்கிப்போகும்.

(6) ஒவ்வொரு மாகாணத்திலும், உள்நாட்டில் தயாராகும் பொருள்களின் குணம் உயர்வாக இருக்கும்படி செய்யவும், அவைகளை நல்ல விலைகளுக்கு விற்கும்படி செய்யவும், அன்னிய நாடுகளிலிருந்து உயர்வான பொருள்கள் சரியான விலைக்கு இந்நாட்டிற்குள் இறக்குமதியாகும்படி தனிப்பட்ட 'மார்க்கெட்டிங்' போர்டொன்று நியமிக்கப்படவேண்டும்.

(7) போஸ்டல் சேவிங்ஸ் பாங்கிகளில் அதிகப் பணம் டிபாஸிட்டு செய்யவும், திரும்ப வாங்கிக்கொள்ளவும் அதிக வசதிகள் ஏற்படவேண்டும்.

(8) நிலஸ்வான்கள் கடன்கொடுக்க முடியாத நிலையிலிருந்து தவிப்பதை நீக்கத்தனிப்பட்ட சில முறைகள் கையாளப்படவேண்டும்.

(9) உள்நாட்டுக்குள் பணம் அனுப்ப தபாற்செலவு—உண்டி ஸ்டாம்புச் செலவு குறைபடவேண்டும்.

(10) கவர்ன்மெண்டு கடன் பாண்டுகளை விலைக்கு விற்கவும் வாங்கவும் சாமானிய பாங்கிக்கு உரிமைவேண்டும்.

இவைபோன்ற பலதரப்பட்ட சிபார்சுகள் செய்யப்பட்டிருப்பதுடன் மற்றும் பொதுவாய்க் குறிப்பிடப்பட்ட பல சிபார்சுகளின் மூலமாயும் பலவிதத்தில் கிராமச்செழிப்பு அதிகரிக்கலாம். அவைகளில் முக்கியமானவை:

(1) இந்தியாவில் 'ரிஸர்வ்பாங்கி' யொன்றை யமைத்து அதில் சாதாரண சொற்ப முதலுள்ள பாங்கியாரும் மெம்பராயிருக்கலாம்.

(2) அன்னியநாட்டு ஏற்றுமதி இறக்குமதி சௌகரியங்களைக் குறித்துத் தனிமையாய் கவர்ன்மெண்டார் ஓர் 'எக்சேஞ்சு' பாங்கியை ஏற்படுத்தல் வேண்டும். (சிலர் இதை ஆக்ஷேபிக்கின்றனர். வேறு சிலர் இது பூராவும் இந்தியரின் மேற்பார்வையிலேயே இருக்கவேண்டுமென்கின்றனர்.)

(3) நாணயத்திற்குத் தவிர மற்றும் இதர காரியங்களிற்கும் வேண்டிய தங்கத்தை ரிஸர்வ் பாங்கியாரே வாங்கி விற்பனைசெய்யவேண்டும்.

(4) ரயில்வேக் கம்பெனிகளும் ரயிலில் ஏற்றுமதி இறக்குமதியாகும் பொருள்களின் கிரயத்தை வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கும் உரிமைபெறவேண்டும். ஆங்காங்கே பெரிய வியாபாரஸ்தலங்களில் ரெயில்வேக்கள் கிடங்குகளைக் கட்டிவைக்கலாம்.

(5) உண்டிகள், பில்கள் இவைகளின் சார்ஜைக் குறைக்கவேண்டும்.

(6) 'பாங்கிங்' என்ற விஷயத்தைக் கற்பிக்க யூனிவர்ஸிடிகளில் விசேஷ சௌகரியங்கள் செய்யப்படவேண்டும்.

இதனிடையில் கனம் ராம்தாஸ் பந்துலு அவர்களின் தனிப்பட்ட அபிப்பிராயத்தை வெளியிட விரும்புகிறோம். உள்நாட்டில் தனிப்பட்ட மனிதரோ, குடும்பத்தினரோ, ஒருவர் இருவர் அல்லது சிலரோ நடத்தும் லேவாதேவித் தொழிலையும் 'பாங்கி' என்ற சொல்லின்கீழ் அமைக்கவேண்டுமென்று இவ்விசாரணைத் தொடக்கத்திலிருந்தே என்மனதில் நிகழ்ந்து வருகிறது. இவைகளை 'பாங்கிங்' ஆக்டு நிபந்தனைக்குள் கொண்டுவருவதில் விசேஷ சிரமமேற்படுமென்றும் தோன்றவில்லை. ஐக்கியநாணயச் சங்கங்களைமட்டுமே என் 'பாங்கி' எனச் சேர்க்கவேண்டும். இவைகளை ஏன் ஒதுக்கவேண்டுமென்பதின் கருத்தும் எனக்குத் தெளிவாயில்லை. மேற்சொல்லப்பட்ட தனிப்பட்ட நபரோ சிலரோ சேர்ந்து செய்யும் உண்டியல்க் கடைகளையும் பாங்கிகளாகச் சேர்த்துக்கொள்வதால் உள்நாடுகளில் அனேகர் இத்தொழிலை மேற்கொள்வர். இத்தொழிலும் கௌரவமடையும். இதனால் மற்ற பாங்கிகளுக்கும் கூட்டுறவு பாங்கிகளுக்கும் ஒருவித இடையூறும் நேரிடாது.

(கெ. எஸ். எம்.)

[stamp]

அடக்கம்.

பக்கம்.

1. நமது நோக்கம் 1

2. வன பஞ்சாயத்துகள் 3

3. தங்க நாணய மதிப்பும் இந்திய விவசாயியும் 5

4. சென்னை மாகாண வனப் பஞ்சாயத்துகள் — 1930-31 வருஷ யாதாஸ்து 14

5. முனிசிபல் சபைகள், லோகல் போர்டுகள், இன்ஸ்பெக்டரின் அறிக்கை :—

(i) 10-9-31-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நெ. D. Dis. 23,455. 17

(ii) 6-10-31-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நெ. D. Dis. 30,937 18

பொது விளம்பரம்.

தாலூக்கா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள். பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிருபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சமிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிருபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிருபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.